# சினித்துளி.com

cinethuli.com

இலவச இதழ்

மலர்-1 இதழ்-12




## எனது ஹனிமூன் பற்றி ரசிகர்கள் முடிவெடுப்பார்கள்

### நடிகை த்ரிஷா போட்ட பதிலடி பதிவு



# ‘அகண்டா 2: தாண்டவம்’ டிச.5ல் ரிலீஸ்!

பாலகிருஷ்ணா நடித்துள்ள ‘அகண்டா 2: தாண்டவம்’ திரைப்படம் டிசம்பர் 5ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

செப்டம்பர் மாதம் வெளியாவதாக அறிவிக்கப் பட்ட படம் ‘அகண்டா 2: தாண்டவம்’. ஆனால், இறுதிகட்டப் பணிகள் தாமதத்தினால் படத்தின் வெளியீடு ஒத்திவைக்கப்பட்டது. தற்போது இப்படம் டிசம்பர் 5ம் தேதி வெளியாகும் என்று படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

இதன் ஓடிடி, தொலைக்காட்சி, இசை என அனைத்து உரிமைகளும் பெரும் விலைக்கு விற் பனையாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

போயபட்டி சீனு இயக்கத்தில் பாலகிருஷ்ணா நடிப்பில் உருவாகி வரும் படம் ‘அகண்டா 2: தாண்டவம்’. இதன் முதல் பாகம் மாபெரும் வர வேற்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் பாகத்தை 14 ரீல்ஸ் நிறுவனம் தயா ரித்து வருகிறது. சமீபத்தில் வெளியிடப்பட்ட இதன் டீஸர் இணையத்தில் கொண்டாடப்பட்டது.

இப்படத்தில் சம்யுக்தா, ஆதி பினிஷெட்டி, ஹர்ஷாலி மால்ஹோத்ரா உள்ளிட்ட பலர் பால கிருஷ்ணா உடன் நடித்துள்ளனர். இதன் ஒளிப் பதிவாளராக ராம் பிரசாத் மற்றும் சந்தோஷ் , எடிட்டராக தம்மி ராஜு, இசையமைப் பாளராக தமன் ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள். முதல் பாகத்தைப் போலவே இப்படத்திலும்அதிரடியான சண்டைக் காட்சிகள் இருக்கும் என்கிறது படக் குழு.

தினசரி நாளிதழின் இன்றைய இணைப்பு
cinethuli.com
சினித்துளி.com

# ராஜமௌலியின் சொத்து மதிப்பு கிடுகிடு

நான் ஈ, பாகுபலி 1–2 மற்றும் RRR படங்களின் மூலம் உலகளவில் இந்திய சினிமாவை கொண்டு சென்றவர் இயக்குநர் எஸ்.எஸ். ராஜமௌலி.

இவர் 2001ஆம் ஆண்டு வெளிவந்த ஸ்டு டென்ட் நம்பர் 1 படத்தின் மூலம் தெலுங்கில் அறிமுகமானார். தொடர்ந்து பல வெற்றிப் படங் களை கொடுத்து முன்னணி இயக்குநர் எனும் அந்தஸ்துக்கு உயர்ந்தார்.

இயக்குநர் ராஜமௌலி தனது 52வது பிறந்த நாளை கொண்டாடும் இவருக்கு ரசிகர்கள் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகி றார்கள்.

# ரிஷப் ஷெட்டியின் பேஸ்புக் காதல் திருமணத்தில் முடிந்தது?

கன்னட நடிகர் ரிஷப் ஷெட்டி இயக்கத்தில் சமீபத்தில் வெளியாகி மாஸ் வரவேற்பு பெற்று வரும் திரைப்படம் காந்தாரா சாப்டர் 1. இப்படத்தை Hombale பிலிம்ஸ் தயாரிக்க ருக்மிணி வசந்த் கதாநாயகியாக நடித்திருந்தார்.

மேலும் ஜெயராம், குல்ஷன், ராகேஷ் பூஜாரி ஆகியோர் இப்படத்தில் நடித்திருந்தனர். இப்படம் நல்ல வரவேற்பு பெற்று வரும் நிலையில், ரிஷப் ஷெட்டி மனைவி பிரகதி ஷெட்டி முன்பு பேட்டி ஒன்றில் இவர்கள் காதல் கதை குறித்து பேசிய விஷயம் தற்போது பலரின் கவனத்தை ஈர்த் துள்ளது. அதில், "ரக்ஷித் ஷெட்டியின் 'உளிதவரு கண் டந்தே' படம் பார்த்த பின் நானும் என் அலுவலக நண்பர்களும் நடிகர் ரக்ஷித் ஷெட்டியின் ரசிகர் களாகிவிட்டோம்.

அவரது அடுத்த படமான 'ரிக்கி' வெளியான போது, வார இறுதியில் நாங்கள் அனைவரும் ரிக்கி பார்க்க தியேட்டருக்குச் சென்றிருந்தோம். அப்போது பல ரசிகர்கள் நடிகர் ரக்ஷித் ஷெட்டியைச் சூழ்ந்துகொண்டு செல்ஃபி எடுத்துக்கொண்டிருந்தனர்.

நானும் சென்று போட்டோ எடுத்து கொண்டேன். இப்படிப் பேசிக்கொண்டிருந்தபோது நாங்கள் ஒரே ஊர்க்காரர்கள், குந்தாபுரத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்தது. பின் ஃபேஸ்புக் மூலம் நண்பர்கள் ஆகி, பின் காதலர்கள் ஆகி விட்டோம்" என்று தெரிவித்துள்ளார்.

# ரஜினிகாந்தின் போயஸ் கார்டன் வீட்டின் மதிப்பு?

சூப்பர்ஸ்டார் என ரசிகர்களால் கொண்டாடப் பட்டு வருபவர் ரஜினிகாந்த். இவர் நடிப்பில் இந்த ஆண்டு கூலி படம் வெளிவந்தது. விமர்சன ரீதியாக பின்னடைவை சந்தித்தாலும், வசூலில் ரூ.500+ கோடி வசூல் செய்திருந்தது.

இப்படத்தை தொடர்ந்து அடுத்ததாக ரஜினி நடித்து வரும் படம் ஜெயிலர் 2. இப்படத்தை நெல்சன் திலீப்குமார் இயக்கி வருகிறார். இப்படத் தின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடை பெற்று வருகிறது.

இதன்பின், கமலுடன் இணைந்து ரஜினிகாந்த் நடிக்கப்போகிறார். ஆனால், இயக்குநர் இன்னும் உறுதி செய்யப்படாததால் அறிவிப்பு வெளிவர தாமதம் ஆவதாக சொல்லப்படுகிறது.

இந்நிலையில், அதுகுறித்து தகவல் தற்போது வெளியாகியுள்ளது. அதன்படி, போயஸ் கார் டனில் உள்ள ரஜினியின் வீட்டின் விலை மதிப்பு ரூ.40 கோடி ரூ.50 கோடி இருக்கும் என கூறப் படுகிறது.





# காதலுக்கு வயது தடையில்லை?

# நிச்சயதார்த்தம் முடித்த விஜய் தேவரகொண்டா ராஷ்மிகா மந்தனா

நடிகை ராஷ்மிகா மந்தனா தமிழ், தெலுங்கு, ஹிந்தி என பல மொழிகளில் டாப் ஹீரோயினாக இருந்து வருகிறார். தற்போது ஹிந்தியிலும் அவருக்கு அதிக பட வாய்ப்புகள் வந்து கொண்டிருக்கிறது.

இவர் தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டாவை காதலித்து வருகிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

அவர்கள் ஜோடியாக வெளிநாடு ட்ரிப் சென்று வரும் புகைப்படங்களும் அடிக்கடி வைரலாகின்றன. சில தினங்களுக்கு முன் தான் இவர்கள் நிச்சயம் செய்து கொண்டனர் என்ற தகவல் வெளியானது. இந்நிலையில், தற்போது ராஷ்மிகா மந்தனா மற்றும் விஜய் தேவரகொண்டா இடையேயான வயது வித்தியாசம் குறித்து தகவல் வெளியாகி உள்ளது.

அதன்படி, ராஷ்மிகா மந்தனாவின் வயது 29. விஜய் தேவரகொண்டாவின் வயது 36. இருவருக்கும் இடையேயான வயது வித்தியாசம் 7 ஆண்டுகள் என சொல்லப்படுகிறது.

சினிமாவில் இருக்கும் பிரபலங்கள் நிஜத்தில் ஜோடியானால் ரசிகர்கள் பெரிய அளவில் கொண்டாடுவார்கள். நட்சத்திர ஜோடிகள் லிஸ்ட் எடுத்தால் சூர்யாஜோதிகா, அஜித்ஷாலினி, சினேகாபிரசன்னா என இப்படி கூறிக்கொண்டே போகலாம்.

அப்படி ரசிகர்கள் இந்த ஜோடி நிஜத்தில் இணைவார்களா என எதிர்ப்பார்க்கப்படுபவர்கள் தான் விஜய் தேவரகொண்டாராஷ்மிகா ஜோடி.

இவர்கள் கீதா கோவிந்தம் படத்தில் முதன் முறையாக ஜோடி சேர்ந்து நடிக்க அப்போதே ரசிகர்கள் சூப்பர் ஜோடி என கொண்டாடினார்கள்.

தற்போது என்ன தகவல் என்றால் விஜய் தேவரகொண்டா, ராஷ்மிகா இருவருக்கும் ஹைதராபாத்தில் நேற்று (அக்டோபர் 3) நிச்சயதார்த்தம் நடந்து முடிந்துள்ளதாக தெலுங்கு மீடியாக்களில் கூறப்படுகிறது.

திருமணம் அடுத்த வருடத்தில் நடத்த முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது. விஜய் தேவரகொண்டா, ராஷ்மிகா இருவரும் படத்தில் திருமணம் செய்தபோது எடுத்த புகைப்படம் ஒன்று தற்போது வைரலாகி வருகிறது.



# திரைப்பட ஜோடிகளில் யாருக்கு சொத்து அதிகம்

சினிமா நட்சத்திரங்கள் பல கோடியில் சொத்துக்கள் வைத்திருப்பது வழக்கமான ஒன்று தான். இந்நிலையில், சினிமாவில் பணக்கார ஜோடிகளாக வலம் வருபவர்கள் யார் யார் என்பது குறித்து தகவல் வெளியாகி உள்ளது.

## ராம் சரண் உபாசனா காமினேனி

முதல் பணக்கார ஜோடிகளாக வலம் வரும் ராம் சரண் உபாசனா காமினேனி ஜோடி பல கோடியில் சொத்து வைத்திருக்கின்றனர்.

ஒரு பக்கம் தென்னிந்தியாவின் பிரபல நடிகராக திகழ்ந்து வருகிறார் ராம் சரண். மறு பக்கம், அப்பல்லோ மருத்துவமனை நிறுவனத்தின் துணை தலைவராக வலம் வருகிறார் உபாசனா.

## நாகர்ஜுனா – அமலா:

நாகர்ஜுனா அமலா சினிமா துறையில் மிகவும் பிரபலமான ஒரு ஜோடி. இந்த ஜோடியின் சொத்து மதிப்பு சுமார் ரூ. 800 கோடி இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

## அல்லு அர்ஜுன் – சினேகா:

இந்த ஜோடியின் சொத்து மதிப்பு மட்டும் சுமார் ரூ. 500 கோடி இருக்கும் என்று கூறப்படுகிறது.

## அஜித் குமார் – ஷாலினி:

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக வலம் வருகிறார் அஜித். தற்போது கார் ரேசிலும் மாஸ் காட்டி வரும் அஜித் ஷாலினி ஜோடிக்கு ரூ. 450 முதல் ரூ. 500 வரை சொத்து மதிப்பு இருக்கும் என்று சொல்லப்படுகிறது.






# காந்தாரா படத்தில் நடிக்க நடிகை ருக்மிணி வசந்த் வாங்கிய சம்பளம் எவ்வளவு

சமீபத்தில் வெளிவந்து மக்கள் மத்தியில் அமோக வரவேற்பை பெற்றிருக்கும் படம் காந்தாரா சாப்டர் 1. கடந்த 2022ஆம் ஆண்டு வெளிவந்த காந்தாரா படத்தின் அடுத்த பாகமாக இப்படம் வெளிவந்துள்ளது.

இப்படத்தில் ரிஷப் ஷெட்டி ஹீரோவாக நடித்து இயக்கியுள்ளார். இவருடன் இணைந்து ருக்மிணி வசந்த் நடித்திருக்கிறார். அழகிய கதாநாயகியாக வந்து செல்வது மட்டுமின்றி, கிளைமாக்ஸில் ருக்மிணி கொடுத்த ட்விஸ்ட் திரையரங்கை அதிரவைத்தது.

இந்நிலையில், காந்தாரா சாப்டர் 1 படத்தில் கதாநாயகியாக நடிக்க ருக்மிணி வாங்கிய சம்பளம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தில் நடிப்பதற்காக அவர் ரூ. 1 கோடி சம்பளம் பெற்றதாக கூறுகின்றன.

# கரூரில் இறந்தவர்ளுக்கு ஒரு லட்சம் கொடுத்த கமல்

கரூரில் நடிகர் விஜய்யின் அரசியல் பிரச்சாரத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்டு 41 பேர் மரணம் அடைந்தனர். அந்த சம்பவம் பற்றிய வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது.

விஜய் தரப்பை நீதிமன்றம் கடுமையாக விமர்சித்து இருந்த நிலையில், நீதிபதியை சில விஜய் ரசிகர்கள் தாக்கி சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட நிலையில் அவர்கள் மீதும் தற்போது





கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கூட்ட நெரிசலில் இறந்தவர்களின் குடும்பத்துக்கு நடிகர் விஜய் 20 லட்சம் ரூபாய் கொடுப்பதாக அறிவித்து இருந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இந்நிலையில் தற்போது நடிகர் கமல்ஹாசன் கரூரில் இறந்தவர்கள் குடும்பத்துக்கு தலா 1 லட்சம் ரூபாய் தருவதாக அறிவித்து உள்ளார். கரூருக்கு நேரில் சென்று கமல் இந்த நிதியை குடும்பத்தினரிடம் வழங்கி இருக்கிறார்.

## காந்தாரா சாப்டர் 1 படப்பிடிப்பு முடிந்தபின் நடிகர் மரணம்

காந்தாரா சாப்டர் 1 படம் கடந்த வாரம் வெளிவந்து மக்கள் மத்தியில் அமோக வரவேற்பை பெற்றுள்ளது. பிரம்மாண்ட பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட இப்படம் இதுவரை உலகளவில் ரூ. 340+ கோடி வசூல் செய்துள்ளது.

ராகேஷ் பூஜாரி காந்தாரா சாப்டர் 1 படத்தில் ஒரு முக்கிய ரோலில் நடித்து அனைவரையும் சிரிக்க வைத்தவர் நடிகர் ராகேஷ் பூஜாரி. இவர் காந்தாரா சாப்டர் 1 படப்பிடிப்பு முடிந்து 20 நாட்களுக்கு பின், மாரடைப்பால் இறந்துள்ளார்.

துரதிர்ஷ்டவசமாக தனது நண்பரின் திருமணத்தில் அவர் கலந்துகொண்டபோதுஇப்படி நடந்துள்ளதாக கூறப்படுகிறது. இவருடைய மரணத்திற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் படத்தின் துவக்கத்தில் படக்குழு இரங்கல் தெரிவித்து இவருடைய புகைப்படத்தை போட்டிருந்தனர்.

## 17 வயது வித்தியாசத்தில் திருமணம் செய்த நடிகர்

சினிமா துறை பொறுத்தவரை வயது பார்த்து திருமணம் செய்து கொள்ள மாட்டனர். அந்த வகையில், 54 வயதான நடிகர் தன்னை விட 17 வயது இளையவரை திருமணம் செய்து கொண்டார்.

அவர் யார் தெரியுமா? விஜய் தேவரகொண்டா நடிப்பில் திரையரங்குகளில் வெளியான தெலுங்கு படம் 'கிங்டம்'. இந்த படத்தில் நடித்த மனிஷ் சவுத்ரி தான் அந்த நடிகர்.

இவர் கடந்த 2023ம் ஆண்டு தனது 54 வயதில் ஸ்ருதி மிஸ்ராவை திருமணம் செய்து கொண்டார். ஸ்ருதிக்கு அப்போது வயது 37. இருவருக்கும் இடையில் 17 ஆண்டுகள் வயது வித்தியாசம் உள்ளது.

இந்த வயது வித்தியாசம் குறித்து பேட்டி ஒன்றில் மனிஷ் சவுத்ரி பகிர்ந்துள்ளார்.

அதில், " எங்களுக்கு இந்த வயசு வித்தியாசம் பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை. ஆனால், ஸ்ருதிக்கு அவரது வீட்டில் உள்ளவர்களை சமாதானப்படுத்த 2 ஆண்டுகள் தேவைப்பட்டது" என்று தெரிவித்துள்ளார்.


Smart
Promoters
LEGAL
YouTube
CHANNEL PROMOTION
• SOCIAL NETWORKS
• DIGITAL CHANNELS
100% REAL AND ORGANIC GROWTH
www.smartpromoters.com

# சினிமாவை கொல்லாதீர்கள்

## பவன் கல்யாண் வேண்டுகோள்!



தெலுங்கு சினிமாவை ஆளும் மெகா குடும்பத்தின் ஒரு நடிகர் பவன் கல்யாண். அக்கட அம்மி இக்கட அப்பாயி என்ற படத்தின் மூலம் கடந்த 1996ம் ஆண்டு திரைத்துறையில் நாயகனாக அறிமுகமானார்.

ஆண்டுக்கு ஒரு படம் 30 ஆண்டுகால சினிமா வாழ்க்கையில் 30 படங்கள் நடித்துள்ளார். இவர் நடிப்பில் கடந்த 25ஆம் தேதி திரையரங்கில் வெளிவந்த திரைப்படம் OG.

சுஜித் இயக்கிய இப்படத்தில் முன்னணி நடிகர் பவன் கல்யாண் நடித்திருந்தார். இப் படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றதை தொடர்ந்து, இப்படத்தின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் விழா ஒன்று நடைபெற்றது.

இதில், பவன் பேசிய விஷயம் இணையத்தில் வைரலாகி வருகிறது. அதில், " ரசிகர்களுக்கு படத்துக்குப் பின்னால் என்ன நடக்கிறதுஎன்று தெரியவில்லை. இயக்குநர் சுஜித் தனது மனைவியையும் குழந்தையையும் ஒன்றரை மாதமாகப் பார்க்கவில்லை.

ஆனால், அனைவரும் படும் கஷ்டங்களை அறியாமல் ரசிகர்கள் இணையத்தில் சண்டையில் ஈடுபடுகிறார்கள். ஒரு காலத்தில் திரைப்படங்கள் 100 நாட்கள் கொண்டாடிய நாட்கள் எல்லாம்இருந்தது. ஆனால், இப்போது ஒரு படத்தின்ஆயுட்காலம் 6 நாட்கள் மட்டுமே. ஆகையால் தயவுசெய்து சினிமாவை கொல்லாதீர்கள்.ஒருவருக்கொருவர் பாராட்டுங்கள்" என்று தெரிவித்துள்ளார்.

# கணவரின் ஆயுள் நீடிக்க நடிகை காஜல் அகர்வால் கொண்டாடிய பண்டிகை



தென்னிந்திய அளவில் முன்னணி நடிகையாக இருப்பவர் காஜல் அகர்வால். இவர் கடந்த 2020ஆம் ஆண்டு கவுதம் கிச்சலு எனும் தொழிலதிபரை திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு நீல் எனும் ஒரு மகன் இருக்கிறார்.

இந்த நிலையில், நடிகை காஜல் அகர்வால் தனது கணவர் மற்றும் குடும்பத்துடன் இணைந்து கர்வா சௌத் என்கிற பண்டிகையை கொண்டாடியுள்ளார். கணவரின் நீண்ட ஆயுள் மற்றும் நல்வாழ்வுக்காக பெண்கள் விரதத்தை மேற்கொள்வது இந்த கர்வா சௌத் பண்டிகை ஆகும் என கூறப்படுகிறது.

இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் காஜல் அகர்வால், தொடர்ந்து தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை அதில் பதிவு செய்து வருகிறார்.

அந்த வகையில் தற்போது கர்வா சௌத் பண்டிகையை கொண்டாடிய அழகிய தருணங் களில் எடுத்துக்கொண்ட புகைப்படங் களை இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டுள்ளார் காஜல். இந்த புகைப்படங்கள் தற்போது இணையத்தில் படுவைரலாகி வருகிறது.


cinethuli.com
சினித்துளி.com

மின்னனு PDF வடிவில் வெளியாகும் தரமான இதழ்

ஆசிரியர், வெளியீட்டாளர்
மகாலட்சுமி
MahaLakshmi
Cell: 9337501889

முதன்மை செய்தியாளர்
Rakesh, C.N.Rajan

துணை ஆசிரியர்கள்
Tina, Arulmozhi, Thenuka

வடிவமைப்பு
SML GRAPHICS Ph:9444228203

நிர்வாக அலுவலகம்
Dheivam.com
HIG 215, K6, KALINGAVIHAR, BHUBANESWAR, ODISHA - 751 019.

தொடர்பு கொள்ளவும்
7789941009



### இதழ்குறித்த தன்னிலை விளக்கம்

இந்த இதழ் முழுவதும் இணையதளத்தையும், வலைதளங்களையும் சார்ந்தே திரட்டப்படும் செய்திகளை ஒழுங்குப்படுத்தி தரப்படும் தன்னிகரில்லா இதழாகும், இந்த தளத்தில் வெளிவரும் செய்திகள், விளம்பரங்கள் புகைப்படங்கள் அனைத்தையும் எந்தவித லாபநோக்கமின்றி தொகுக்கப்பட்டு நேர்த்தியாக ஒழுங்குபடுத்தி வாசகர்களின் பார்வைக்கு கொடுக்கும் சிறப்பான ஒரு சேவையை செய்துவருகிறோம். இந்த இதழில் வரும் அனைத்து செய்தி, விளம்பரம், புகைப்படத்திற்கு எந்தகாரணம் கொண்டும் எவ்விதத் தனிநபரும் பொறுப்பாகமாட்டார்கள், மற்றபடி இணையதள சட்டவரன்முறைக்கு ஏற்ப இந்த இதழ் தயாரிக்கப்படுகிறது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு சட்ட வரன்முறையின் வழி பிசகாமல், மற்றவரை இகழ்வது, தாழ்த்துவது, சமுதாயத்தை சீரழிக்கும் செய்திகளை வெளியிடுவது கிடையாது. சேவை மட்டுமே நமது நோக்கம்.

படிக்க தவறாதீர்கள்

# வாரம்தோறும் ஒரு புத்தகம்
# மாதத்திற்கு 4 புத்தகங்கள்

மலர்-1 இதழ்-2 1-15 ஏப்ரல் 2022 www.dheivam.com

## தெய்வம்

இலவச இதழ் தெய்வீக தேடலின் ஒளிவிளக்கு

இலவச இதழ் www.panmugam.com

## பன்முகம்.காம்

மலர்-2 இதழ்-40 05 மார்ச் 2024 மாதமிருமுறை இதழ்

தமிழ்நாடு இ பேப்பர்.காம் தினசரி நாளிதழின் இன்றைய இணைப்பு ஞாயிற்றுக்கிழமை ஸ்பெஷல்

cinethuli.com

## சினித்துளி.com

இலவச இதழ் மலர்-1 இதழ்-6










தமிழ்நாடு இ பேப்பர்.காம்

## நாளிதழில் வெளிவரும்
## வார இதழ்களை படியுங்கள்

**Cell:7789941009**

# பணி நேர சர்ச்சை
## தீபிகா படுகோனே காட்டமான பதில்

சமீபத்தில் 'கல்கி 2989 ஏடி' படத்திலிருந்து தீபிகா படுகோன் நீக்கப்பட்டு இருப்பதாக தயாரிப்பு நிறுவனம் அறிவித்தது. அதற்கான காரணங்கள் என பல விஷயங்கள் வெளியாகின. அதற்கு முன்னதாக 'ஸ்பிரிட்' படத்திலும் தீபிகா படுகோன் நடிக்க ஒப்புக் கொள்ளவில்லை. அதற்கான காரணங்களும் இணையத்தில் வெளியாகி பெரும் சர்ச்சையை உருவாக்கின.

8 மணி நேரம் மட்டுமே பணிபுரிய முடியும் என கூறியது சர்ச்சையானதற்கு தீபிகா படுகோன் காட்டமாக பதிலடிக் கொடுத்துள்ளார்.

தினமும் 8 மணி நேரம் மட்டுமே பணிபுரிய முடியும் என்று தீபிகா கூறியதே இதற்கு காரணம் எனப் பலரும் குறிப்பிட்டார்கள். இது தொடர்பாக முதன்முறையாக தீபிகா படுகோன் பேட்டியொன்றில் பதிலளித்துள்ளார்.

"இந்திய திரையுலகில் பல்வேறு முன்னணி ஆண் நடிகர்கள் பல வருடங்களாக தினமும் 8 மணி நேரம் மட்டுமே நடிக்க ஒப்புக் கொள் கிறார்கள். அதெல்லாம் தலைப்பு செய்தியாகவில்லை. ஆனால், நான் சொன்னால் மட்டும் பெரிய செய் தியாகிவிடுகிறது. ஏன் என்று தெரியவில்லை.

சில ஆண் நடிகர்கள் வார நாட்களில் மட்டுமே நடிப்பார்கள், வார இறுதி நாட்களில் படப்பிடிப்புக்கு வரமாட்டார்கள். இந்திய திரையுலகில் இருக்கும் ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால், இது ஒழுங்கற்ற திரையுலகமாகும். இதனை கட்டமைக்க வேண்டும். சமீபத்தில் குழந்தைப் பெற்ற சில நடிகைகள் கூட 8 மணி நேரம் தான் பணிபுரிகிறார்கள். அதுவுமே தலைப்பு செய்தியாகவில்லை" என்று அதில் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், "எனது வாழ்க்கை முழுவதும் இதுபோன்ற சவால்களை எதிர்கொண்டிருக் கிறேன். எப்போதும் அமைதியாக என் போராட்டங் களை நடத்தியிருக்கிறேன். சில நேரங்களில் அந்தப் போராட்டங்கள் பகிரங்கமாகிவிடும், நான் வளர்க்கப்பட்ட விதம் அப்படி இல்லை.

ஆனால் அவற்றை அமைதியாகவும் கண்ணியமாகவும் எதிர்கொள்வதில் நம்பிக்கை கொண்டுள் ளேன்" எனவும் குறிப்பிட் டுள்ளார் தீபிகா படுகோன்.





# ‘ஹாய்’ படத்தில் இணையும்
# நயன்தாரா – கவின்

விஷ்ணு எடவன் இயக்கத்தில் கவின் – நயன்தாரா நடிக்க புதிய படமொன்று தொடங்கப்பட்டது. ஆனால், திட்டமிட்டப்படி படப்பிடிப்பு நடைபெறாமல் கருத்து வேறுபாடுகள் நிலவி வந்தன.

தற்போது அனைத்து கருத்து வேறுபாடுகளும் தீர்க்கப்பட்டு, படப்பிடிப்பு தொடங்கவுள்ளார்கள். இப்படத்துக்கு ‘ஹாய்’ எனப் பெயரிடப்பட்டு ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டுள்ளது படக்குழு.

செவன் ஸ்கிரீன் நிறுவனம் தயாரித்து வந்த இப்படத்தில் புதிதாக இரண்டு தயாரிப்பாளர்கள் இணைந்திருக்கிறார்கள். தி ரவுடி பிக்சர்ஸ் மற்றும் ஜீ ஸ்டூடியோஸ் ஆகிய நிறுவனங்களும் இதில் தயாரிப்பாளராக இணைந்திருக்கிறார்கள். தீபாவளி முடிந்தவுடன் படப்பிடிப்பு தொடங்க படக்குழு ஆயத்தமாகி வருகிறது.

மேலும், இயக்குநர் கே.பாக்யராஜ், பிரபு, ராதிகா, சத்யன், ஆதித்யா கதிர், குரேஷி உள்ளிட்ட பலர் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்கள். லோகேஷ் கனகராஜிடம் பல படங்களில் இணை இயக்குநராக பணிபுரிந்த விஷ்ணு எடவன் இயக்குநராக அறிமுகமாகிறார். ‘ஹாய்’ குறித்து இயக்குநர் விஷ்ணு எடவன், “முழுக்க முழுக்க பொழுதுபோக்கான குடும்பக் கதையில் உண்மையான காதலையும் கூறும் படமாக உருவாகி வருகிறது” என்று தெரிவித்துள்ளார்.

இதுவரை 20 நாட்கள் படப்பிடிப்பு முடிந்துள்ளது. இப்படத்தில் மொத்தம் 7 பாடல்கள் உள்ளன. அதில் இரண்டு பாடல்கள் முழுமையாக காட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

# எனது ஹனிமூன் பற்றி ரசிகர்கள் முடிவெடுப்பார்கள்

42 வயதிலும் அழகு மற்றும் Fitnessஸில் இளம் நாயகிகளுக்கு சவால் விடுகிறார். தமிழ் மட்டும் இல்லை தெலுங்கிலும் முன்னணி நாயகியாக வலம் வரும் த்ரிஷா திருமணம் எப்போது என கேட்காத ரசிகர்களே இல்லை.

மௌனம் பேசியதே படத்தின் மூலம் மக்களால் கவனிக்கப்படும் நாயகியாக வலம் வர பெரிய ரீச் கொடுத்தது விக்ரமின் சாமி படம் தான். பின் லேசா லேசா, அலை, எனக்கு 20 உனக்கு 18, கில்லி, ஆயுத எழுத்து, திருப்பாச்சி, ஜி, ஆறு, உனக்கும் எனக்கும், கிரீடம் போன்ற பல படங்களில் நடித்தார்.

இடையில் சில வருடங்கள் த்ரிஷா மார்க்கெட் சரிய பொன்னியின் செல்வன் படம் அவருக்கு ஏறு முகத்தை கொடுத்துள் ளது. தற்போது தெலுங்கில் சிரஞ்சீவியுடன் விஸ்வம் பரா, சூர்யாவுக்கு ஜோடியாக கருப்பு ஆகி படங்களில் நடித்துள் ளார்.



## நடிகை த்ரிஷா போட்ட பதிலடி பதிவு

கடந்த சில நாட்களாக நடிகை த்ரிஷா பஞ் சாப் தொழிலதிபர் ஒருவரை திரு மணம் செய்ய இருப்பதாக செய் திகள் வேகமாக பரவின.

இதுகுறித்து நடிகை த்ரிஷா தனது இன்ஸ்டா ஸ்டோரியில், எனது வாழ்க்கை பற்றி மற்றவர்கள் முடிவு செய்வதை விரும்புகிறேன்.

எனது ஹனிமூனையும் அவர்களே பிளான் செய்வதற்காக காத்துக் கொண்டிருக்கி றேன் என தக்க பதிலடி பதிவு போட்டுள்ளார்.



# தொழிலதிபர்களை திருமணம் செய்து கொண்ட நடிகைகள்



சினிமா நட்சத்திரங்கள் பல கோடியில் சம்பளம் பெறுவது வழக்கமான ஒன்று.

இதில், சில நடிகைகள் தங்களுடன் பணிபுரியும் நடிகர்களை திருமணம் செய்து கொள்கின்றனர்.

மற்ற சிலர் பணக்கார தொழிலதிபர்களை திருமணம் செய்து கொள்கின்றனர். அந்த வகையில், தொழிலதிபர்களை திருமணம் செய்துக்கொண்ட தமிழ் நடிகைகள் யார் யார் என்பது குறித்து கீழே பார்க்கலாம்.

சினித்துளி .com

## கீர்த்தி சுரேஷ்

தமிழ் சினிமாவில் இது என்ன மாயம் என்ற படத்தின் மூலம் அறிமுகமானவர் நடிகை கீர்த்தி சுரேஷ். இவர் கொச்சியைச் சேர்ந்த தொழிலதிபரும் கட்டுமான அதிபருமான ஆண்டனி என்பவரை பல வருடங்களாக காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

## ஹன்சிகா மோத்வானி

ஹன்சிகா விஜய், தனுஷ் என தமிழ் சினிமாவில் பல முன்னணி நடிகர்களுடன் நடித்து பிரபலமானவர். இவர் மும்பையைச் சேர்ந்த தொழிலதிபர் சோஹைல் கதுரியாவை மணந்தார்.

## காஜல் அகர்வால்

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகைகளில் ஒருவர் காஜல். இவர் தொழில்முனைவோர் கௌதம் கிட்ச்லுவை மணந்தார். கிட்ச்லு ஒரு உள்துறை வடிவமைப்பு மற்றும் மின் வணிக முயற்சியின் நிறுவனர் ஆவார்.

## அசின்

அசின் மைக்ரோமேக்ஸ் இணை நிறுவனர் ராகுல் சர்மாவை திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்கு பின் இவர் சினிமாவை விட்டு விலகினார்.

## ஸ்ரேயா சரண்

ஸ்ரேயா தொழில்முனைவோர் மற்றும் தேசிய அளவிலான டென்னிஸ் வீரர் ஆண்ட்ரி கோஷீவை மணந்தார்.



# ஒல்லிக்குச்சி உடம்புக்காரியாக மாறிய எமி ஜாக்சன்

மாடலிங் துறையில் ஆர்வம் காட்டி நிறைய போட்டிகளில் பங்கேற்று பிரபலமானவர் நடிகை எமி ஜாக்சன். இந்த துறையால் தான் அவருக்கு தொடர்பே இல்லாத தமிழ் திரைப்பட உலகம் சினிமாவில் நடிக்க வைத்தது.

ஆர்யா நடித்த மதராசப்பட்டினம் படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்து தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் அதன்பின் தாண்டவம், ஐ, தங்கமகன், தெறி, கெத்து, எந்திரன் 2.0, தேவி என தொடர்ந்து நிறைய படங்களில் நடித்து வந்தார்.

தமிழை தாண்டி தெலுங்கு, ஹிந்தி போன்ற மொழிகளிலும் படங்கள் நடித்தவர் இப்போது ஹாலிவுட்டில் தான் அதிக கவனம் செலுத்தி வருகிறார்.

கடந்த 2019ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டை சேர்ந்த தொழில் அதிபர் ஜார்ஜ் பனோயிட் என்பவரை நிச்சயதார்த்தம் செய்தவர் திருமணம் செய்யாமல் ஆண் குழந்தை பெற்றார்.

ஆனால் அவர்களுக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்தார்கள். பின்னர் ஹாலிவுட் நடிகர் எட் வெஸ்விக் என்பவரை காதலித்து திருமணமும் செய்துகொண்டார். இவர்களுக்கும் சமீபத்தில் அழகிய குழந்தை பிறந்தது.

ஏற்கெனவே ஒல்லியாக காணப்படும் நடிகை எமி ஜாக்சன் இப்போது மிகவும் ஒல்லியாகி ஆளே அடையாளம் தெரியாத அளவிற்கு மாறியுள்ளார்.

தினசரி நாளிதழின் இன்றைய இணைப்பு
cinethuli.com
சினித்துளி.com

# பெரிய கனவுகளுடன் காத்திருக்கும் ராஷி கன்னா

இந்திய அளவில் பிரபலமான முன்னணி நடிகைகளில் ஒருவர் ராஷி கண்ணா. இவர் இமைக்கா நொடிகள் படத்தின் மூலம் தமிழ் சினிமா ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார்.

இப்படத்தை தொடர்ந்து அரண்மனை 3 –



4, அயோகியா, அடங்க மறு ஆகிய படங்களில் நடித்து தமிழில் தனக்கென்று தனி இடத்தை உருவாக்கியுள்ளார்.

இவருக்கு கோலிவுட் முதல் பாலிவுட் வரை நல்ல பேன் பேஸ் உள்ளது. திரைப்படங்களை தாண்டி வெப் தொடர்களிலும் அதிகம் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்நிலையில், தற்போது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு ராஷி கண்ணா பேசிய விஷயம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

அதில், "ரசிகர்களின் விருப்பத்துக்குரிய கதாநாயகியாக சினிமாவில் தொடர்வது மகிழ்ச்சி அளிக்கிறது. இன்னும் பெரிய கனவுகளுடன் காத்திருக்கிறேன். நல்லதே நடக்கும் என்று எதிர்பார்க்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# ரஜினியை காதலித்த பிரபல நடிகை!

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக புகழின் உச்சத்தில் வலம் வருபவர் நடிகர் ரஜினிகாந்த். சூப்பர் ஸ்டார் என்று ரசிகர்களால் அன்போடு அழைக்கப்பட்டு வருகிறார். கடைசியாக இவர் நடிப்பில் கூலி திரைப்படம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் ரஜினி, நாகர்ஜுனா, அமீர்கான், சத்யராஜ், சௌபின் சாஹிர், நித்யா ராம், ஸ்ருதிஹாசன், சார்லி, லொள்ளு சபா மாறன், கண்ணா ரவி உள்ளிட்ட பலர் நடித்தனர்.

இந்நிலையில், 80களில் நடிகை ஒருவர் ரஜினியை ரகசியமாக காதலித்ததாக தகவல் ஒன்று வெளியாகி உள்ளது.

அவர் வேறு யாருமில்லை, நடிகை சில்க் ஸ்மிதாதான். இவர்கள் இருவரும் இணைந்து மூன்று முகம், தங்க மகன், பாயும் புலி, ரங்கா உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளனர்.

இவர்கள் குறித்து காதல் கிசுகிசுக்கள் வெளியான சமயத்தில், ரஜினிகாந்த் லதாவை திருமணம் செய்திருந்தார். இதனால் அப்போது வெளியான இந்த தகவல் உண்மையா, இல்லையா என்று யாருக்கும் தெரியாது.





அருள்தரும் **தெய்வம்**

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

SPECIAL OFFER

அபிமான உறவுகளே !

மாதம் இருமுறை வெளிவரும்
"அருள்தரும் தெய்வம்" இதழுக்கு இன்றே ஆண்டு
சந்தாதாரர் ஆகுங்கள் !"

ஒவ்வொரு இதழிலும் கவர்ச்சிகரமான பரிசுகளை வெல்லுங்கள்!

**வருட சந்தா**
**ரூ. 399/**
மட்டுமே



**1st பரிசு ரூ.1000/**

**2 வது பரிசு ரூ.500/**

**3வது பரிசு ரூ. 250/**

மேலும் 10 நபர்களுக்கு, ஆறுதல் பரிசாக தலா, ரூ. 100 வழங்கப்படும்.

செப்டம்பர் 7ம் தேதி
இதழுக்கான கேள்வி

**பெருமாளுக்கு உதவி செய்த மருமகன் யானை வாகனம் கொண்ட முருகன்**

இந்த தலைப்பு
இடம்பெற்ற பக்க எண்
கூறி பரிசு வெல்லுங்கள்

ஆகஸ்ட்-22 இதழுக்கான வெற்றியாளர்கள்


1st S.NAGARAJAN


2nd THARA MADHAN


3rd USHA MUTHURAMAN

முதல் மூன்று பரிசு வென்றவர்கள்

ஆறுதல் பரிசு வென்றவர்கள்

1. Vasugi, 2. Valampuri Nagarajan, 3. Armugam,
4. Padmavathi, 5. Shivashankar, 6. Shanmugam,
7. Siva Kumar M, 8. Panneerselvam, 9.VijayKumar, 10.Pravathi

போட்டியில் பங்கு பெறுபவர்கள் தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும்

**கூடுதல் தகவல்களைப் பெற: 7092894609**

அருள்தரும்

# தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

மாதம் தோறும்
இரு இதழ்களாக
வெளிவரும்

**அருள்தரும்**
**தெய்வம்**

இதழின் சந்தாதாரர்
ஆகுங்கள்

- 1 வருட சந்தா ரூ.399
- 2 வருட சந்தா ரூ.699
- 3 வருட சந்தா ரூ.999

**பரிசை அள்ளுங்கள்?**

நிர்வாக அலுவலகம்

## PADMA MEDIA HOUSE

No.116, EH Road, Gandhi Nagar ,
Tondiarpet, Chennai-600081

சந்தா செலுத்த அருகில் உள்ள
க்யூஆர் கோட் ஸ்கேன் செய்யவும்
மேலும்தொலைபேசி எண்ணில்
தொடர்பு கொண்டு
சந்தாதாரர் ஆகுங்கள்

PhonePe
ACCEPTED HERE
Scan & Pay Using PhonePe App
MS PADMA MEDIA HOUSE

சந்தா மற்றும் அனைத்து விபரங்களுக்கும்
அலைபேசி எண்: 9337501889




# ஒரு வார வசூல் ரூ.400 கோடியை தாண்டிய 'காந்தாரா: சாப்டர் 1'

இயக்குனர் ரிஷப் ஷெட்டியின் இயக்கிய காந்தாரா: சாப்டர் 1 திரைப்படம் உலகம் முழுவதும் வெளியாகி வசூலில் முதல் இடத்தில் உள்ளது.

இந்தியாவில் ஒரே வாரத்தில் இதன் வசூல் ரூ.379 கோடியை எட்டியது. இந்தி படத்தின் வசூல் கடந்த புதன்கிழமை ரூ100 கோடியை கடந்தது. தெலுங்கு பதிப்பின் வசூல் இது வரை ரூ.60 கோடிக்கு மேல் உள்ளது. மலையாளம் மற்றும் தமிழ் மொழியில் டப்பிங் செய்யப்பட்ட படங்களும் ரூ.20 கோடிக்கு மேல் வசூல் ஈட்டியது. வெளிநாடுகளில் இதன் ஒரு வார வசூல் 8 மில்லியன் டாலரை எட்டியுள்ளது. இதன் ஒரு வார வசூல் ரூ.470 (53 மில்லியன் டாலர்) கோடியை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஹாலிவுட்டில் வெளியான 'டேலர் ஸ்விப்ட்: தி அபிஷியல் ரிலீஷ் பார்ட்டி ஆப் ஏ ஷோகேர்ள்' திரைப்படத்தின் ஒரு வார வசூல் 50 மில்லியன் டாலர் மட்டுமே. டி கேப்ரியா நடித்த, 'ஒன் பேட்டில் ஆப்டர் அனதர்' திரைப்படமும் 2வது வாரத்தின் வசூல் 40 மில்லியன் டாலர் மட்டுமே. மீண்டும் வெளியிடப்பட்ட 'அவதார்: தி வே ஆப் வாட்டர்' திரைப்படத்தின் வசூலும் இதே காலத்தில் 10 மில்லியன் டாலருக்கு கீழாகவே உள்ளது.

# ஐசரி கணேஷ் தொடங்கிய புதிய இசை நிறுவனம்

'கோமாளி', 'பி.டி. சார்', 'மூக்குத்தி அம்மன்', 'வெந்து தணிந்தது காடு', 'சிங்கப்பூர் சலூன்' உள்பட பல படங்களை வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் மூலம் தயாரித்து வருபவர், ஐசரி கே கணேஷ். இப்போது 'மூக்குத்தி அம்மன் 2', விக்னேஷ் ராஜா இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள படம், 'கட்டா குஸ்தி 2', 'டயங்கரம்' உள்பட பல படங்களைத் தயாரித்து வருகிறார். இந்நிலையில் தனது பிறந்த நாளை முன்னிட்டு 'வேல்ஸ் மியூசிக் இன்டர்நேஷனல்' என்ற நிறுவனத்தைத் தயாரிப்பாளர் ஐசரி கே கணேஷ் தொடங்கியுள்ளார்.

இதுபற்றி அவர் கூறும்போது, "இசையும் சினிமாவும் நம் கலாச்சாரத்தின் உயிர்நாடி. உலக இசைத்துறையில் நிகழும் மாற்றங்களுடன் நாமும் இணைந்து முன்னேற வேண்டும். தமிழ்த் திறமைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் தளமாக இது இருக்கும். இது நாளைய இசையை உருவாக்கும் இயக்கம். தொழில்நுட்பம், திறமை, கதை சொல்லல் ஆகியவை ஒன்று சேரும் தென்னிந்தியாவின் படைப்பாற்றல் மையமாக 'வேல்ஸ்' உருவாகும். எனது பிறந்தநாளில் இந் நிறுவனத்தைத் தொடங்கி இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றார்.

ஏ.ஆர்.ரஹ்மான், ஜி.வி.பிரகாஷ் குமார்,

ஹிப் ஹாப் தமிழா ஆதி, சித்து குமார், கோவிந்த் வசந்தா, ஷான் ரோல்டன் ஆகிய இசை யமைப்பாளர்களுடன் இணைந்து, புது தலைமுறை தமிழ் இசை திறமைகளை இந்நிறுவனம் உருவாக்க இருப்பதாகத் தெரிவித்துள்ளது.



# சிம்புவை காதலிக்கும் சீரியல் நடிகை:

விஜய் டிவியில் ஒளிபரப்பாகி வெற்றிகரமாக சென்று கொண்டிருக்கும் தொடர்களில் பாண்டியன் ஸ்டோர்ஸ் சீரியலும் ஒன்று. இந்த தொடர் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இப்போது வரை பல திருப்பங்களுடன் சென்று கொண்டிருக்கின்றது. இந்த தொடரில் ஐஸ்வர்யா என்ற கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் சாய் காயத்ரி. இவருடைய தங்கை தான் மதுரா. இவரும் சின்னத்திரையில் பிரபலமான நடிகையாக திகழ்கிறார். இந்நிலையில் இவர் சிம்புவை காதலிப்பது குறித்து சமீபத்தில் பேட்டி ஒன்று அளித்திருக்கிறார். அதில் அவர் கூறியிருப்பது, பள்ளி படிக்கும் காலத்திலேயே காலையில் சன் மியூசிக் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்கும்போது சிம்புவின் பாடல் ஒன்றை கண்டேன்.

அப்போது பார்த்ததிலிருந்து சிம்பு மேல் எனக்கு ஒரு கிரஸ். அதன்பின் அந்த படம் தம் என்றும் அவர் பெயர் சிம்பு என்றும் கண்டுபிடித்தேன். அப்போதிலிருந்து 16 வருடமாக நான் சிம்புவை ஒருதலையாக காதலித்து வருகிறேன். சிம்புவை நேரில் பார்த்தால் உடனடியாக ப்ரொபோஸ் செய்துவிடுவேன் என்று கூறி சிம்புவை ப்ரொபோஸ் செய்யும் மதுரா வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. இதை ரசிகர்கள் பயங்கரமாக ட்ரெண்டிங் ஆகி வருகிறார்கள். சிலர் இந்த வீடியோவிற்கு நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் கமெண்ட்டுகளை போட்டு வருகிறார்கள். ஆக மொத்தத்தில் சிம்புவிற்கு திருமணமானால் போதும் என்று சிலர் கூறி வருகிறார்கள்.






சுந்தர்.சி இயக்கத்தில் நயன்தாரா நடித்து வரும் 'மூக்குத்தி அம்மன் 2' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் சமீபத்தில் வெளியிடப்பட்டது

சுந்தர்.சி இயக்கத்தில் நயன்தாரா நடிப்பில் உருவாகி வரும் படம் 'மூக்குத்தி அம்மன் 2'. இதன் இறுதிகட்டப் படப்பிடிப்பு விரைவில் தொடங்க வுள்ளது. தற்போது விஜய தசமியை முன்னிட்டு இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டுள்ளது படக்குழு. இதற்கு இணையத்தில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

'மூக்குத்தி அம்மன்' படத்தின் முதல் பாகம் பெரும் வரவேற்பைப் பெற்றது. இதனை ஆர்.ஜே. பாலாஜி இயக்கியிருந்தார். தற்போது சுந்தர்.சி இயக்கத்தில் 2ம் பாகம் உருவாகி வருகிறது. இதில் நயன்தாராவுடன் பல முன்னணி நட்சத்திரங்கள் நடித்து வருகிறார்கள். இப்படத்தை பெரும் பொருட்செலவில் வேல்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது.

'மூக்குத்தி அம்மன் 2' தொடர்பாக வேல்ஸ் நிறுவனத்தின் ஐசரி கணேஷ் கூறும்போது, "'மூக்குத்தி அம்மன்' ஒரு படம் மட்டும் அல்ல, மக்களை உணர்வுரீதியாக கவர்ந்த படைப்பு. பக்தி, மர்மம், நகைச்சுவை என அனைத்தையும் கலந்து, ஒரு பிரம்மாண்டமான திரையரங்க அனுபவத்தைத் தர வேண்டுமென்பதே எங்கள் குறிக்கோள். எங்கள் பிரம்மாண்ட உருவாக்கத்தின் ஒரு சிறு துளிதான் இந்த ஃபர்ஸ்ட் லுக்.

தெய்வீகமும் மாயமும் நிறைந்த ஃபர்ஸ்ட் லுக் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைக் குவித்து வருகிறது. வரும் கோடை கால விடுமுறையில் படத்தை வெளியிட திட்டமிட்டு இருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

# கோடை விடுமுறையில் வெளியாகும்




தமிழ்நாடு தினசரி நாளிதழின் இன்றைய இணைப்பு
cinethuli.com
சினித்துளி.com




ஒரே தரமான நம்பர் 1 நாளிதழ்

தமிழ்நாடு
இபேப்பர்.காம்





# 1950 காதல் காவியமாக உருவாகிய 'சந்திரிகா'

தென்னிந்திய சினிமாவில் 1950 மற்றும் 1960 களில் நன்றாக அறியப்பட்ட இயக்குநராகவும் தயாரிப்பாளராகவும் இருந்தவர் வி.எஸ்.ராகவன். ஏவி.எம் ஸ்டூடியோவில் சவுண்ட் இன்ஜினீயராக வாழ்க்கையைத் தொடங்கிய இவர், சிவாஜி கணேசன், பானுமதி நடித்த 'கள்வனின் காதலி' (1955), சாரங்கதாரா (1958), டி.ஆர்.மகாலிங்கம், பானுமதி நடித்த 'மணிமேகலை'(1959) ஆகிய படங்களை இயக்கி இருக்கிறார். தனது ரேவதி புரொடக்ஷன்ஸ் மூலம் 'மனிதனும் மிருகமும்' (1953), 'மேதாவிகள்' (1955) ஆகிய படங்களையும் தயாரித்திருக்கிறார். இவர் தமிழ், மலையாளத்தில் இயக்கிய படம், 'சந்திரா'.

தொழிலதிபரான ஜனார்த்தனனின் மகள் சந்திரிகா, அவர்கள் வீட்டுச் சமையல்காரப் பெண்ணின் மகன் கோபியை காதலிக்கிறார். அந்த காதல் சரியாக வராது என நினைத்து விலகுகிறான் கோபி. ஜனார்த்தனனுக்கு தன் மகளின் காதல் கதை தெரிகிறது. கோபியைத் தனது நிறுவனத்தில் இருந்தும் அவர் அம்மாவை வீட்டில் இருந்தும் விரட்டுகிறார். தனது மருமகனுக்குச் சந்திரிகாவைத் திருமணம் செய்து கொடுக்கத் திட்டமிடுகிறார். இதற்கிடையே தன்னை உங்களுடன் அழைத்துச் செல்லாவிட்டால் தற்கொலை செய்து கொள்வேன் என்று கோபியை மிரட்டுகிறார் சந்திரிகா. பிறகு என்ன நடக்கிறது என்று கதை செல்லும்.

திக்குறிச்சி சுகுமாரன் நாயர், சேதுலட்சுமி, நாகவல்லி ஆர்.எஸ்.குரூப், கோபாலன் நாயர், வி.என்.ஜானகி, பத்மினி, மாலதி, கே.சாரங்கபாணி, எஸ்.பி.பிள்ளை, டி.எஸ்.பாலையா என பலர் நடித்தனர். ஸ்ரீ கிருஷ்ணா புரொடக் ஷன்ஸ் சார்பில் கே.எம்.கே.மேனன் தயாரித்த இந்தப் படத்துக்கு என்.சி.பாலகிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்தார்.

வி. தட்சிணாமூர்த்தி மற்றும் ஜி. கோவிந்த ராஜூலு நாயுடு இசை அமைத்தனர். தமிழ்ப் பாடல்களை பி. பாஸ்கரன் எழுதினார். ஜிக்கி, பி.லீலா பாடினர். 'கண்ணில் விளையாடும் காதலே', 'என் உள்ளம் விளையாடுதே', 'விண் ணின் தரை போலே', 'லில்லி பப்பி லில்லி பப்பி லாயி லில்லிரே' ஆகிய பாடல்கள் வரவேற்பைப் பெற்றன.

வாஹினி ஸ்டூடியோவில் தமிழ், மலை யாளத்தில் ஒரே நேரத்தில் உருவான இந்தப் படம், மலையாளத்தில் 1950ம் ஆண்டு ஆக.24 ம் தேதி வெளியானது. தமிழில் அதே ஆண்டு, செப்.29ல் வெளியாகி வரவேற்பைப் பெற்றது.



# நவம்பரில் வெளியாகும் மெடிக்கல் த்ரில்லர் படம் 'அதர்ஸ்'

கிராண்ட் பிக்சர்ஸ் தயாரிப்பில் புதுமுகம் ஆதித்ய மாதவன், கவுரி கிஷன், அஞ்சு குரியன் பிரதான வேடத்தில் நடித்திருக்கும் படம் 'அதர்ஸ்'. மெடிக்கல் கிரைம் த்ரில்லராக உருவாகியிருக்கும் இப்படத்தை அறிமுக இயக்குனர் அபின் ஹரிஹரன் எழுதி இயக்கியுள்ளார்.

அரவிந்த் சிங் ஒளிப்பதிவு செய்திருக்கும் இப்படத்துக்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். எடிட்டிங் பணிகளை ராமர் மேற்கொண்டுள்ளார். பிரதீப் சண்டை காட்சிகளையும், சந்தோஷ் நடன அமைப்பையும் கையாண்டிருக்கின்றனர்.

# மீண்டும் 'நாயகன்' நவ.6ல் ரீரிலீஸ்

கமல்ஹாசனின் பிறந்த நாளையொட்டி, 'நாயகன்' திரைப்படம் ரீரிலீஸ் ஆகவுள்ளது.

பழைய படங்கள் மீண்டும் ரீரிலீஸ் ஆகும் ட்ரெண்டில் இணைந்துள்ளது 'நாயகன்'. நவம்பர் 6ம் தேதி இப்படம் ரீரிலீஸ் செய்யப்படவுள்ளது. நவம்பர் 7ம் தேதி கமல்ஹாசன் தனது 71வது பிறந்த நாளைக் கொண்டாடவுள்ளார். இதனை முன்னிட்டு 'நாயகன்' ரீரிலீஸ் ஆகவுள்ளது. இதற்கான மெருக்கேற்றும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

மணிரத்னம் இயக்கத்தில் கமல் நடிப்பில் வெளியான படம் 'நாயகன்'. 1987ம் ஆண்டு வெளியான இப்படம் பெருமளவில் கொண்டாடப்பட்டது. இப்போது இப்படத்தினை கல்ட் க்ளாஸிக் என்று கொண்டாடி வருகிறார்கள்.



இளையராஜாவின் இசையில் அமைந்த பாடல்களும் இதன் வெற்றிக்கு ஒரு காரணம்.

இதில் ஜனக ராஜ், சரண்யா பொன் வண்ணன், டெல்லி கணேஷ், நிழல்கள் ரவி, நாசர் உள்ளிட்ட பலர் கமலுடன் நடித்திருந்தார்கள். மும்பையைப் பின்னணியாக கொண்டு இப்படத்தை உருவாக்கி இருந்தார் மணிரத்னம். இதற்கு ஒளிப்பதிவாளராக பி.சி.ஸ்ரீராம் பணிபுரிந்திருந்தார். இப்படத்துக்கு பின்பு கமல் மணிரத்னம் இருவரும் இணைந்து பணிபுரிந்த படம்தான் ‘தக் லைஃப்’. அப்படம் பெரும் தோல்வியை தழுவியது குறிப்பிடத்தக்கது.

# மம்மூட்டி மோகன்லால் இணையும் புதிய படம்!

மகேஷ் நாராயணன் இயக்கத்தில் மம்மூட்டி, மோகன்லால் உள்ளிட்ட பிரபலங்கள் புதிய படம் ஒன்றில் நடித்து வந்தார்கள். இப்படம் மலையாள திரையுலகில் பெரும் எதிர்பார்க்கப்படும் படமாக இருந்து வருகிறது. சமீபத்தில் மம்மூட்டிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் இதன் படப்பிடிப்பு தடைப்பட்டது. தற்போது அவர் உடல் நிலை தேறி திரும்பியிருப்பதால் படப்பிடிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

இப்படத்துக்கு ‘பேட்ரியாட்’ என பெயரிட்டுள்ளது படக்குழு. மேலும், இதன் சிறிய டீஸர் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்கள். இதில் ஃபகத் பாசில், குஞ்சாகோ போபன், நயன்தாரா, ரேவதி உள்ளிட்ட பலர் மம்மூட்டி ரூ மோகன்லால் உடன் இணைந்து நடித்துள்ளார்கள். முழுக்க ஆக்ஷன் படமாக இது அமைந்திருப்பது டீஸர் மூலம் தெரியவருகிறது.

இப்படத்தினை ஆண்டோ ஜோசப் மற்றும் கே.ஜி.அனில் குமார் இணைந்து தயாரித்துவருகிறார்கள். இதன் ஒளிப்பதிவாளராக மனுஷ் நந்தன், இசையமைப்பாளராக சுஷின் ஸ்யாம் ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள். இதன் வெளியீடு எப்போது என்பதை படக்குழு அறிவிக்கவில்லை.

# ராம் சரண் நடிக்கும் பெத்தி

கிரிக்கெட்டை மையமாக வைத்து அதிக பொருட்செலவில் இப்படம் உருவாகி வருகிறது.

தெலுங்கில் தேசிய விருது பெற்ற இயக்குநர் புச்சி பாபு சனா இயக்கத்தில் ராம் சரண் நடிக்கும் புதிய படம் பெத்தி. ராம் சரணுடன் கன்னட சூப்பர் ஸ்டார் சிவராஜ் குமார், ஜான்வி கபூர் ஆகியோர் நடிக்கும் இந்தப் படத்திற்கு ஏஆர் ரஹ்மான் இசையமைக்கிறார்.

கிரிக்கெட்டை மையமாக வைத்து அதிக பொருட்செலவில் இப்படம் உருவாகி வருகிறது. சுகுமார் ரைட்டிங்ஸ், வ்ரிதி சினிமாஸ், மைத்ரி மூவி மேக்கர்ஸ் ஆகியவை இப்படத்தை இணைந்து தயாரிக்கின்றன.

படத்தின் முதல் பார்வை க்ளிம்ஸ் வீடியோ சில மாதங்களுக்கு முன் வெளியானது. இந்தப் படம் அடுத்தாண்டு மார்ச் 27 அன்று திரையரங்குகளில் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் படத்தில் ஒரு சிறப்பு பாடலுக்கு நடனமாடவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் ரசிகர்கள் உற்சாகத்தில் இருக்கின்றனர்.



# தமிழ்நாடு
## இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

**8122664699**




# பொங்கல் ரேஸில் மூன்று படங்கள் முந்தப் போவது யார்?

வரும் பொங்கல் பண்டிகைக்கான வெளியீட்டில் விஜய்யின் ‘ஜனநாயகன்’, சிவகார்த்திகேயனின் ‘பராசக்தி’ இருந்த நிலையில், தற்போது பான் இந்தியா படமான ‘த ராஜா சாப்’ படமும் இணைந்திருக்கிறது. இதன் மூலம் பொங்கல் ரேஸ் சூடு பிடித்திருக்கிறது.

பண்டிகை தினங்கள் என்றாலே கொண்டாட்டம்தான். அதிலும் புதிய படங்கள் ரிலீஸ் ஆகிறதென்றால் ரசிகர்களுக்கு டபுள் சந்தோஷம் உறுதி. அதிலும் பெரிய நடிகர்களின் படங்கள் என்றால் சொல்லவே வேண்டாம். புத்தாடை அணிந்து, அடித்துப் பிடித்து டிக்கெட் வாங்கி ரசிகர்களின் ஆரவாரத்துடன் முதல்நாள் முதல் காட்சி பார்க்கும் அனுபவம் அலாதியானது.

அந்த வகையில் அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு இத்தகைய கொண்டாட்டங்களுக்கு குறைவிருக்காது என்று அடித்துக் கூறலாம். காரணம் விஜய், சிவகார்த்திகேயன், பிரபாஸ் படங்கள் ஒன்றாக ரிலீஸ் ஆகிறது. இந்த மூன்று படங்களுமே ரசிகர்களால் அதிகம் எதிர்பார்க்கும் படங்கள். இவற்றில் எந்தப் படம் பொங்கல் வின்னராக இருக்கும் என்பதே ரசிகர்களின் மற்றொரு மில்லியன் டாலர் எதிர்பார்ப்பு.

## ஜனநாயகன்

அடுத்த ஆண்டு மிக அதிகம் எதிர்பார்க்கப்படும் படங்களின் முதன்மையானதாக இப்படத்தை சொல்லலாம். காரணம் விஜய் இதனை தனது கடைசிப் படமாக ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார். அவர் தற்போது முழுநேர




அரசியலில் இறங்கிவிட்டதாலும், அடுத்த ஆண்டு தமிழக சட்டப்பேரவை தேர்தல் வரவிருப்பதாலும் இயல்பாகவே இந்த படத்துக்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பு உருவாகி விட்டது.

இப்படம் பாலகிருஷ்ணாவின் 'பகவந்த் கேசரி' படத்தின் ரீமேக் என்று சொல்லப்பட்டாலும் இதனை ஹெச்.வினோத் எப்படி தமிழுக்கு ஏற்றவாறு மாற்றி இருக்கிறார் என்ற ஆவலும் எழாமல் இல்லை. ஒரே ஒரு க்ளிம்ப்ஸ் தவிர படம் குறித்த எந்த தகவலையும் வெளியாகவிடாமல் படக்குழு தொடர்ந்து ரகசியம் காத்து வருகிறது. பொங்கல் வெளியீட்டில் இப்படத்துக்கு மிகப் பெரிய ஓபனிங் இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. எனினும் ஆடியன்ஸின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்துவிட்டால் அடுத்த ஆண்டின் மிகப்பெரிய ப்ளாக்பஸ்டராக இப்படம் மாறும்.

## பராசக்தி

'சூரரைப் போற்று' படத்தின் வெற்றிக்குப் பிறகு சுதா கொங்கரா இயக்கும் இப்படத்தின் சிவகார்த்திகேயன், ரவிமோகன், அதர்வா, ஸ்ரீலீலா என பெரும் நடிகர் பட்டாளம் நடிக்கிறது. படத்தின் டைட்டில், அறிவிப்பு டீசர், நடிகர்கள் தேர்வு என அனைத்தும் படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரிக்கச் செய்துள்ளன. தொடர்ந்து 'அமரன்', 'மதராஸி' என தொடர்ந்து ஹிட் கொடுத்திருக்கும் சிவகார்த்திகேயனுக்கு இதுவும் ஹாட்ரிக் வெற்றியாக அமையுமா என்ற கேள்வி ரசிகர்களின் மனதில் எழுந்துள்ளது.

ரவிமோகன் முதல் முறையாக இதில் வில்லன் அவதாரம் எடுத்திருக்கிறார். இந்தித் திணிப்புக்கு எதிரான கதைக்களம் என அரசல் புரசலாக பேசப்பட்டாலும், பழைய 'பராசக்தி'யைப் போன்ற நேர்த்தியான திரைக்கதையும், அனல் பறக்கும் வசனங்களும் இருந்தாலும் இதுவும் தமிழில் இன்னொரு 'கல்ட் கிளாசிக்' ஆக மாறும் வாய்ப்பு உண்டு.

## த ராஜா சாப்

ராஜமவுலியின் 'பாகுபலி' இரண்டு பாகங்களும் பிரபாஸின் மார்கெட்டை இந்தியா முழுவதும் தாறுமாறாக ஏற்றிவிட்டன. அந்த மார்கெட் மதிப்பை தக்கவைக்க அவரும் தொடர்ந்து பான் இந்தியா கதைகளாக நடித்து வந்தாலும் எதுவும் சொல்லிக் கொள்ளும்படி வெற்றியடையவில்லை. பிரசாந்த் நீலின் 'சலார்' மட்டுமே குறிப்பிடத்தக்க வரவேற்பை பெற்றாலும் 'பாகுபலி'யின் ரெக்கார்டை அப்படத்தால் உடைக்க முடியவில்லை. 'கல்கி' நல்ல வசூல் செய்தாலும் விமர்சன ரீதியாக வரவேற்பை




பெறவில்லை.

இந்த சூழலில் தொடர்ந்து சீரியஸ் கதாபாத்திரங்களிலேயே நடித்து வந்த பிரபாஸ் நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒரு கமர்ஷியல் எண்டர்டெய்னர் களத்தில் இறங்கி இருக்கிறார். ட்ரெய்லரிலேயே அவருடைய கதாபாத்திரம் எப்படியானது என்பதை யூகிக்க முடிகிறது. ஆனால் பேய்ப் பட சீசன் ஓய்ந்து போன ஒரு காலகட்டத்தில் இப்படி ஒரு ரிஸ்க்கை பிரபாஸ் எடுத்திருப்பது ஓவர் கான்ஃபிடன்ஸா என்று தெரியவில்லை. காரணம் கடைசியாக இந்த ஜானரில் வெளியான காமெடி ஹாரர் வகைப்படங்கள் எதிர்பார்த்த வெற்றிகளை பெறவில்லை.




இந்தியில் வெளியான 'ஸ்த்ரீ 2' விதிவிலக்கு. காரணம், போதுமான அளவுக்கு அந்த ஜானரை தென்னிந்திய இயக்குநர்கள் அடித்துத் துவைத்து காயப் போட்டு விட்டனர். 'ராஜா சாப்' ட்ரெய்லருமே கூட படத்தின் மீதான எதிர்பார்ப்பை எகிறச் செய்யும் அளவுக்கெல்லாம் இல்லை. எனினும் இதுபோன்ற கதைக்களங்களில் நான்கைந்து நல்ல காமெடிகளும், ஓரளவு சுவாரஸ்யமும் இருந்தாலே கூட ஃபேமிலி ஆடியன்ஸ் கைகொடுத்து காப்பாற்றி விடுவர்.

தீபாவளி பண்டிகைக்கு பெரிய நடிகர்களின் படங்கள் எதுவும் வெளியாகாத நிலையில், பொங்கலுக்கு மூன்று பெரிய நடிகர்களின் படங்கள் வெளியாவது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்துள்ளது. தமிழில் விஜய்க்கு இருக்கும் மார்க்கெட் மிகப்பெரியது. அதிலும் கடைசிப் படம் என்பதால் இயல்பாகவே இந்த படத்துக்குதான் தமிழ் ரசிகர்கள் முன்னுரிமை கொடுக்க வாய்ப்பு அதிகம்.

ஆனால், தமிழகம் தாண்டி தெலுங்கு பேசும் மாநிலங்கள், இந்தியில் பிரபாஸின் மார்க்கெட் மிகப் பெரியது. 'சலார்' அளவுக்கு சுவாரஸ்யமாக இருந்தாலே கூட 'ராஜா சாப்' படம் நல்ல வசூலை செய்துவிடும் வாய்ப்பு அதிகம். இந்த இரண்டு படங்களையும் தாண்டி வெற்றிபெற ஒரு அசத்தலான திரைக்கதையும், அழுத்தமான காட்சிகளும் 'பராசக்தி' படத்துக்கு தேவை. இந்த மூன்று படங்களும் ஒன்றாக மோதுவதால் 2026 பொங்கல் ரேஸ் இதுவரை இல்லாத அளவுக்கு சூடு பிடித்திருக்கிறது




# '96' நடிகர்களின்றி 2-ம் பாகம் எப்போது?

'96' படத்தின் நடிகர்கள் இல்லாமல் 2ம் பாகம் உருவாக வாய்ப்பில்லை என்று இயக்குநர் பிரேம் குமார் உறுதிப்பட தெரிவித்துள்ளார்.

பிரேம் குமார் இயக்கத்தில் விஜய் சேதுபதி, த்ரிஷா நடிப்பில் வெளியான படம் '96'. இப்படம் மாபெரும் வரவேற்பைப் பெற்று, வசூல் சாதனை படைத்தது. இதனைத் தொடர்ந்து இதன் 2ம் பாகத்தினை எழுதியுள்ளார் பிரேம் குமார். முதல் பாகத்தின் முடிவில் இருந்தே 2ம் பாகம் தொடங்கும் எனவும் தெரிவித்திருந்தார்.

சில மாதங்களுக்கு முன்பு '96' 2ம் பாகத்தினை உருவாக்கும் பணிகளில் இறங்கினார். ஆனால், முதல் பாகத்தில் நடித்தவர்கள் இப்போது முன்னணி நடிகர்களாக வலம் வருகிறார்கள். அவர்களுடைய சம்பளம் உள்ளிட்டவற்றை கணக்கில் கொண்டு ஒத்திவைத்துவிட்டார்கள். ஆனால், முதல் பாகத்தில் உள்ள நடிகர்கள் இல்லாவிட்டால் 2ம் பாகத்தினை உருவாக்கவே மாட்டேன் என்று பேட்டியொன்றில் உறுதிப்பட தெரிவித்துள்ளார் பிரேம் குமார்.

சமீபத்தில் '96' 2ம் பாகத்தின் கதையினை படித்துவிட்டு தயாரிப்பாளர் ஐசரி கணேஷ் தங்க செயின் ஒன்றை பரிசாக வழங்கியிருக்கிறார். அந்தளவுக்கு அந்தக் கதை அவருக்கு மிகவும் பிடித்திருக்கிறது. மேலும், தான் இதுவரை எழுதியுள்ள கதையிலும், இனிமேல் எழுதயிருக்கிற கதையிலும் '96' 2ம் பாகத்தின் கதையே சிறந்தது எனவும் பிரேம் குமார் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அது படமாக உருவாகுமா என்பது தான் இப்போதைய பெரிய கேள்வியாக இருக்கிறது.

லாபம் TV

+91 778 994 1009

# PROMOTE YOUR LOCAL BUSINESS ONLINE



## FOR 5 YEARS ONLY 499/-

## WHAT YOU WILL GET?

- BUSINESS WEBSITE
- BUSINESS LISTING WITH ONLINE PROMOTION
- DIGITAL BUSINESS CARD
- BUSINESS PROMOTION IN OUR YOUTUBE CHANNEL
- BUSINESS PROMOTION IN OUR FACEBOOK PAGE
- ONLINE LIVE TV CHANNEL PROMOTION
- ONLINE STORE
- ONLINE SERVICE APPOINTMENT BOOKING
- ONLINE FOOD ORDER
- GIVE DISCOUNT COUPONS TO CUSTOMERS

AND SO MUCH MORE....!

CALL : 7789941009 VISIT : LAABHAMTV.COM WHATSAPP : 7789941009





# ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் தேவாவுக்கு கவுரவம்!

பிரபல இசையமைப்பாளர் தேவா சமீபத்தில் ஆஸ்திரேலியா சென்றிருந்தார். அவர் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் கவுரவிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "செப். 24ம் தேதி ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் மிகுந்த மரியாதையுடன் என்னை வரவேற்றனர். அவைத்தலைவர் இருக்கையில் அமர வாய்ப்பு அளிக்கப்பட்டது.

பின்னர் மரியாதைக்குரிய செங்கோல் வழங்கப்பட்டது. அந்த தருணம் எனக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் இசை மற்றும் கலாச்சாரத்தைப் பரப்பி வரும் ஒவ்வொரு தெற்காசிய கலைஞருக்கும் சொந்தம்.

இந்த அங்கீகாரத்தை உங்கள் அனைவருக்கும் சமர்ப்பிக்கிறேன். இதற்காக லாரன்ஸ் அண்ணா துரை மற்றும் ஆஸ்திரேலிய அரசுக்கு எனது மனமார்ந்த நன்றி" என்று கூறியுள்ளார்.

# இயக்குநராக களமிறங்கும் வரலட்சுமி சரத்குமார்

தென்னிந்திய திரையுலகில் பல்வேறு கதாபாத்திரங்களில் நடித்து புகழ் பெற்றவர் வரலட்சுமி சரத்குமார். திருமணமான பின்பும் கூட தொடர்ச்சியாக திரையுலகில் கவனம் செலுத்தி வருகிறார். தற்போது புதிதாக இயக்குநராகவும் களமிறங்கியிருக்கிறார். இப்படத்துக்கு 'சரஸ்வதி' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

'தோசா டைரீஸ்' என்ற நிறுவனத்தின் மூலம் வரலட்சுமி சரத்குமார் மற்றும் பூஜா சரத்குமார் இணைந்து இப்படத்தினை தயாரிக்கவுள்ளனர். இதில் முதன்மை கதாபாத்திரத்தில் வரலட்சுமி நடித்து இயக்கவுள்ளார். இவருடன் பிரகாஷ்ராஜ், பிரியாமணி, நவீன் சந்திரா உள்ளிட்ட பலர் நடிக்கவுள்ளனர். தமிழ் மற்றும் தெலுங்கு என இருமொழிகளிலும் இப்படம் உருவாகவுள்ளது.

இதற்கு ஒளிப்பதிவாளராக எட்வின் சகாய், இசையமைப்பாளராக தமன் ஆகியோர்

பணிபுரியவுள்ளனர். வரலட்சுமி இயக்குநராக அறிமுகமாக இருப்பதற்கு பல்வேறு திரையுலகினர் அவருக்கு வாழ்த்துகள் தெரிவித்து வருகிறார்கள்.

# சினிமாவுக்கு என் முழு பலத்தையும் கொடுப்பேன்: விக்ரம் பிரபு



சினிமாவுக்கு என் முழு பலத்தையும் கொடுப்பேன் என்று கலைமாமணி விருது அறிவிக்கப்பட்டது நடிகர் விக்ரம் பிரபு தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு சார்பில் 2021, 2022, 2023 ம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருது அறிவிக்கப்பட்டது. அதில் 2022ம் ஆண்டுக்கான நடிகருக்கான கலைமாமணி விருது பெறவுள்ளார் விக்ரம் பிரபு. இந்த விருது வென்றது குறித்து விக்ரம் பிரபு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், “2022ம் ஆண்டிற்கான கலைமாமணி விருதை தமிழக அரசிடமிருந்து பெறுவதில் நான் பெருமையும், பணிவும் அடைகிறேன்.

இந்த அங்கீகாரத்துக்காக அரசுக்கும், நடுவர் குழுவுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் குடும்பத்தினர், தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், சக ஊழியர்கள், நலம் விரும்பிகள் மற்றும் என் பார்வையாளர்கள் உங்கள் நிலையான அன்பு மற்றும் ஊக்கத்துக்கு நன்றி. இந்த அங்கீகாரம் எனக்குச் சொந்தமானது போலவே உங்களுக்கும் சொந்தமானது. சினிமா எனக்கு எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறது. நான் தொடர்ந்து அதற்கு என் முழு பலத்தையும் கொடுப்பேன்” என்று தெரிவித்துள்ளார் விக்ரம் பிரபு.

# இயக்குநராக அறிமுகமாகும் சூர்யாவின் மகள் தியா!



சூர்யா, ஜோதிகா தம்பதியின் மகள் தியா. தங்கள் குழந்தைகளின் படிப்புக்காக கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னால் சூர்யா, ஜோதிகா மும்பையில் குடியேறினர். படப்பிடிப்பு சமயங்களில் மட்டும் சென்னை வந்து சென்று கொண்டிருந்தனர். இந்த சூழலில் இவர்களின் மகள் தியா தற்போது ஆவணக் குறும்படம் ஒன்றை இயக்கியுள்ளார்.

2டி என்டர்டைன்மென்ட் நிறுவனம் சார்பில், சூர்யா ஜோதிகா தயாரித்துள்ளம் இந்த ஆவணக் குறும்படம், பாலிவுட் லைட்வுமன்களின் வாழ்க்கையை மையமாக கொண்டு உருவாயிருக்கிறது. இதற்கு ‘லீடிங் லைட்’ என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது.

திரைக்கு பின்னால் இருந்து பணிபுரியும் லைட்வுமன்களை பற்றியும், அப்பெண்களின் அனுபவங்களை விவரிக்கும் டாக்குமெண்ட்ரி டிராமாவாக இப்படம் உருவாகியுள்ளது. ஆஸ்கர் போட்டிக்காக அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இன்று (செப் 26) முதல் அக்டோபர் 2 வரை இப்படம் திரையிடப்படுகிறது



# ஒருசிலரின் சுயநலம் தான் இன்றைய சினிமாவை அழித்துக் கொண்டிருக்கிறது

## இயக்குநர் பேரரசு காட்டம்

கேந்திரா ஃபிலிம் ஃபேக்டரி சார்பில் உருவாகியுள்ள படம் 'இரவின் விழிகள்'. சிக்கல் ராஜேஷ் இயக்கியுள்ள இப்படத்தில் தயாரிப்பாளர் மகேந்திரா, சிக்கல் ராஜேஷ், நீமா ரே, நிழல்கள் ரவி, அஸ்மிதா, கும்தாஜ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இதன் இசை மற்றும் ட்ரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் படக்குழுவினருடன் சிறப்பு விருந்தினர்களாக இயக்குநர்கள் ஆர்.வி உதயகுமார், பேரரசு, மு.களஞ்சியம், போஸ் வெங்கட், நடிகை நமீதாவின் கணவர் வீரா, நடிகை கோமல் சர்மா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் இயக்குநர் பேரரசு பேசும் போது, "இங்கே அதிமுக, திமுக, நாம் தமிழர், பாஜக என பல கட்சிகளை சேர்ந்தவர்கள் பேச வந்திருக்கிறோம். இயக்குநர் சிக்கல் ராஜேஷ் என்னைப்போல ஊர் பாசம் கொண்டவர். அதனால் தான் தன்னுடைய ஊர் பெயரையும் சேர்த்து வைத்துக் கொண்டார். பெண்கள் ஆண்களுக்கு நிகராக வந்து விட்டார்கள், புரட்சிப் பெண் என்றெல்லாம் சொல்கிறோம். ஆனால் இன்று அவர்களை விட மிக மோசமான நிலையில் வேறு யாருமில்லை. அது குறித்த விழிப்புணர்வை இந்த படம் சொல்ல வருகிறது. இன்று படம் எடுப்பது பெரிய விஷயமில்லை. அதை ரிலீஸ் செய்வது தான் கஷ்டமாக இருக்கிறது.

இன்றைக்கு சினிமாவில் உள்ள மிகப்பெரிய இடர்ப்பாடு இதுதான். திரைப்படத்தை ரிலீஸ் செய்வது தான் முதல் வெற்றியாக இருக்கிறது.

அன்று இந்த சினிமா நன்றாக இருக்க வேண்டுமென அனைவருமே நினைத்தார்கள். ஆனால் இன்று என் படம் மட்டுமே ஓட வேண்டும், நான் மட்டுமே நன்றாக இருக்க வேண்டும் என பலரும் நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். இன்னொரு தயாரிப்பாளரின் படத்திற்கு திரையரங்குகள் கொடுக்க வேண்டுமே என அவர்கள் நினைப்பது இல்லை.

அந்த வகையில் இன்று சினிமாவை அழிப்பது சுயநலம் தான். அப்படி நினைத்தால் ஒரு காலகட்டத்தில் சினிமாவும் அழிந்து இந்த சுயநலத்தில் இருப்பவர்களும் அழிந்து போவார்கள். முன்பெல்லாம் படம் பார்க்கும் ரசிகர்கள், சில முக்கியமான பத்திரிகைகளில் வெளியாகும் விமர்சனங்களுக்காக காத்திருந்து அதை படித்துவிட்டு படம் பார்க்க சென்றார்கள்.

விமர்சனம் வரவில்லை என்றால் போன் போட்டுக் கேட்டார்கள். ஆனால் இன்று ஒரு சிலர் செய்யும் விமர்சனங்களை பார்க்கும்போது ஏன் தான் இவர்கள் இப்படி விமர்சனம் பண்ணுகிறார்கள் என தோன்றுகிறது. வன்மத்தைக் கக்குகிறார்கள். அப்படிப்பட்டவர்களின் விமர்சனத்தை தான் இன்றைய ரசிகர்களின் மன நிலையும் நம்புகிறது. யாரையாவது திட்டினால் தான் அவர்களுக்கு சந்தோசமாக இருக்கிறது. பாசிட்டிவாக சொன்னால் அதை ஒதுக்கி விடுகிறார்கள்.

சின்ன படம் ஓட வேண்டும் என நினைப்பவர்கள் அனைவருமே சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்துக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். ஒரு நல்ல படம் வெளியானால் அந்த படக்குழுவினரை தன் வீட்டிற்கே வரவழைத்து வாழ்த்துகிறார். இன்றைக்கு அப்படிப்பட்ட மனம் வேறு யாரிடம் இருக்கிறது? ரஜினி சாரே நன்றாக இருக்கிறது என சொல்லிவிட்டார் என்பதற்காக பல பேர் அந்த படத்தை பார்க்கிறார்கள். அந்த வகையில் ஒரு சிறிய பட வெற்றிக்கு சூப்பர் ஸ்டார் உதவி செய்கிறார். ஏனென்றால் அவர் சினிமா நன்றாக இருக்க வேண்டுமென நினைப்பவர்.

அவருடைய ஒரு பட வெற்றி விழாவில் இயக்குநர் சேரன் படத்தைப் பாராட்டி அவருக்கு தங்கச்சங்கிலி போட்டு பரிசளிக்கிறார். எந்த ஹீரோவுக்கு இப்படி ஒரு மனசு வரும்? அதே போல இப்போது இருக்கும் பெரிய ஹீரோக்கள், உங்களுக்குப் பிடித்த சின்ன படங்கள் இருந்தால், அது நன்றாக இருந்தால் தாராளமாக மனது விட்டு பாராட்டுங்கள்” என்று பேசினார் இயக்குநர் பேரரசு.



ஆன்மிக பாடல்கள், சுவையான சமையல் வீடியோக்களை பார்க்க
dheivamtv.com
இணையதளத்திற்கு வாருங்கள்




# ADVERTISING

## FOR ALL TYPES OF NOTICE ADS

| | |
|---|---|
| ➢ Public Notice | ➢ Loss of Share |
| ➢ Legal Notice | ➢ Merger |
| ➢ Tender Notice | ➢ Acquisition |
| ➢ Society Notice | ➢ AFR, UFR, etc. |

Call now for Best Rates

PADMA MEDIA
Advertising

✆ : 7789941009
Email: vilambarampage@gmail.com





# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

**உங்கள் திருமணநாள் மற்றும் பிறந்த நாள்களை (பெரியவர்கள் மற்றும் குழந்தைகள்) நமது தமிழ்நாடு இ-பேப்பர்.காம், வாத்சவ் சேனலுடன் சேர்ந்து கொண்டாடுங்கள்...**

பிறந்தநாள், மற்றும் திருமணநாளை
கொண்டாடுபவர்கள்
அவரவர்களின் புகைப்படத்துடன், பிறந்ததேதி,
வயது, மொபைல் எண், ஊர் பெயர்களை
எங்களுக்கு தெரியப்படுத்தவும்

உங்களைப் பற்றிய தகவல்களை கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு அனுப்பி வைக்கவும் நமது தமிழ்நாடு இ–பேப்பர்.காம் மற்றும்
வாத்சவ் சேனலிலும் புகைப்படத்துடன் வெளியிடுகிறோம்

## Whatsup no.8122664699

மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும் 9337501889



# நயன்தாரா உருக்கம்

மலையாள இயக்குநர் சத்யன் அந்திக்காடு இயக்கத்தில் 2003ம் ஆண்டு வெளியான ‘மனசினக்கரே’ என்ற படம் மூலம் நடிகையாக அறிமுகமானார், நயன்தாரா. சரத்குமார் நடித்த ‘ஐயா’ படம் மூலம் தமிழுக்கு வந்த அவர், தெலுங்கு, மலையாளம், இந்தி மொழிகளிலும் நடித்துள்ளார்.

இந்நிலையில் சினிமாவில் 22 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். இதைத் தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ள அவர், அதற்காகப் பதிவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அதில், “22 ஆண்டுக்கு முன் கேமராவுக்கு முன்னால் முதன்முதலில் நின்ற போது, திரைப்படங்கள்தான் என் வாழ்க்கையின் காதலாக மாறும் என்று தெரியாது. ஒவ்வொரு ஃபிரேமும், ஒவ்வொரு ஷாட்டும், ஒவ்வொரு மவுனமும் என்னை வடிவமைத்தது; என்னைக் குணப்படுத்தியது, என்னை நானாக மாற்றியது. அதற்கு என்றென்றும் நன்றியுடன் இருப்பேன்” என நெகிழ்ச்சியாகக் குறிப்பிட்டுள்ளார்.

# ‘அஞ்சான்’! மீண்டும் வெளியாகிறது

நடிகர் சூர்யா நடித்து, கடந்த 2014ம் ஆண்டு வெளியான படம், ‘அஞ்சான்’. லிங்குசாமி இயக்கியிருந்த இந்தப் படத்தைத் திருப்பதி பிரதர்ஸ் நிறுவனம் தயாரித்திருந்தது.

இதில் சமந்தா நாயகியாக நடித்திருந்தார். வித்யூத் ஜாம்வால், மனோஜ் பாஜ்பாய், சூரி, முரளி சர்மா உள்பட பலர் நடித்திருந்தனர். சந்தோஷ் சிவன் ஒளிப்பதிவு செய்திருந்தார். யுவன் ஷங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் ஹிட்டாகி இருந்தன. ஆனால், படம் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை.

இந்நிலையில் இந்தப் படம் வெளியாகி 11 வருடம் ஆன நிலையில் இப்போது, மறு எடிட் செய்து, மீண்டும் வெளியிட உள்ளதாகத் திருப்பதி பிரதர்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. ‘பாட்ஷா’, ‘வேட்டையாடு விளையாடு’, ‘கேப்டன் பிரபாகரன்’, ‘சச்சின்’, உள்ளிட்ட பல படங்கள் மீண்டும் வெளியிடப்பட்டு வரவேற்பு பெற்றதால், ‘அஞ்சான்’ படத்தையும் இப்போது வெளியிட உள்ளனர்.



பத்திரிகை துறையில்
பணி செய்ய ஆர்வம் உள்ளவரா?

புகைப்படம், கட்டுரை எழுதவிருப்பம்
உள்ளவரா? உங்களுக்கு வாய்ப்புடன்
ஊதியமும் தருகிறோம்....

# தெய்வம் டிவி

சார்பில் வெளிவரும்,
வர்த்தகம், சினிமா, ஆன்மிகம்
சம்பந்தப்பட்ட துறை புத்தகங்களில்
பணியாற்ற விருப்பமுள்ள
புகைப்படக்கலைஞர்கள், எழுத்தாளர்களை
வரவேற்கிறோம்.
மேலும் தகவல்களுக்கு

## Dheivam.com

தொடர்பு
கொள்ளவும்: **7789941009**

# gsspecialfood

கீதாசமையல்

ஆன்லைன் இயற்கை உணவுப்பொருள் அங்காடி

வல்லாரை கீரை இட்லிபொடி

கறிவேப்பிலை இட்லிபொடி

தூதுவளை கீரை இட்லிபொடி

கொள்ளு இட்லிபொடி

முடக்கத்தான் கீரை இட்லிபொடி

பிரண்டை இட்லிபொடி

பூண்டு இட்லி பொடி

எள் இட்லிபொடி










**சத்துமாவு**
41வகை தானியங்களில் தயாரிக்கப்பட்டது

**நலங்கு மாவு**
35 வகை மூலிகைகளில் தயாரிக்கப்பட்டது

**கருப்பு உளுந்து**
கஞ்சிமாவு

**சின்ன வெங்காய வடகம்**

**புளிசாதப் பொடி**

**வெயிட் லாஸ் கஞ்சி மாவு**

**கீழே உள்ள வாட்சப் எண்ணில் தொடர்பு கொண்டு வாங்கிக் கொள்ளலாம் கொரியரில் அனுப்பப்படும்**

7550199561

gsspecialfood.com




தமிழ்நாடு இ பேப்பர்.காம்
தமிழ்நாடு இ பேப்பர் குழுமம் வழங்கும்
பயணங்கள் முடிவதில்லை...
உங்களது பயண அனுபவங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள் சுவாரஸ்யமான பயண அனுபவங்கள் பிரசுரிக்கப்படும்.
பயண படங்கள் மற்றும் கட்டுரைகளை கீழ்கண்ட வாட்ஸ் அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கவும்
8122664699



# விஜய் மகனுக்கு ‘குஷி 2’ ஏ.எம்.ரத்னம் விருப்பம்

விஜய் ஜோதிகா நடிப்பில், எஸ்.ஜே.சூர்யா இயக்கத்தில், ஏ.எம்.ரத்னம் தயாரிப்பில் கடந்த 2000இல் வெளியாகி வெற்றிபெற்ற படம் ‘குஷி’. இது, 25 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மீண்டும் திரையரங்குகளில் வெளியாகிறது. சக்தி ஃபிலிம் ஃபேக்டரியின் சார்பில் சக்திவேலன் வெளியிடுகிறார். இதை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பில் படத்தின் தயாரிப்பாளர், இயக்குநர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம் பேசும்போது: “தமிழில் வெற்றியைத் தொடர்ந்து, தெலுங்கு, இந்தியிலும் எஸ்.ஜெ. சூர்யா தான் இயக்கினார். ஜோதிகா, பூமிகா இருவரது நடிப்பிலும் இயக்குநர் சூர்யா தான் தெரிவார். இப்படத்துக்கு தேவா சார் இசை என்றால் நம்ப முடியாது. விஜய் அப்போது டாப் ஹீரோ. ‘கதையில் சண்டைக் காட்சிகள் இல்லை, வையுங்கள்’ என்று விஜய் கூறினார்.

ஆனால், சூர்யா, ‘இது லவ் ஸ்டோரி, வைக்க முடியாது’ என்று கூறிவிட்டார். ஆனால், விஜய் விடுவதாக இல்லை. தற்போது ‘குஷி 2’ படம் எடுத்தால் நன்றாக இருக்கும். அதையும் எஸ்.ஜே. சூர்யாவே இயக்க வேண்டும். அதில் விஜய் சார் நடித்தாலும் சரி, அல்லது அவருடைய மகன் நடித்தாலும் சரி, அல்லது வேறு யார் நடித்தாலும் முதல் பாகத்தைப் போலவே படம் மிகப்பெரிய வெற்றிபெறும்” என்றார்.

# நெட்பிளிக்ஸ் வெப் தொடரில் பிரியங்கா மோகன்!

தமிழில், டான், எதற்கும் துணிந்தவன், கேப்டன் மில்லர் உள்பட பல படங்களில் நடித்திருப்பவர் பிரியங்கா மோகன். தெலுங்கு படங்களிலும் நடித்து வருகிறார். ‘ஓஜி’ படத்தில் பவன் கல்யாணின் மனைவியாக நடித்துள்ளார். இந்தப் படம் இன்று வெளியாகிறது.

இதற்கிடையே அவர், நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்துக்காக உருவாகும் வெப் தொடரில் நாயகியாக நடிக்க இருக்கிறார். இது அவர் நடிக்கும் முதல் வெப் தொடர். இதை, ‘நித்தம் ஒரு வானம்’ ரா.கார்த்திக் இயக்குகிறார்.

இது தொடர்பான அதிகாரப்பூர்வமான அறிவிப்பு

விரைவில் வெளியாகும் என்கிறார்கள். இயக்குநர் ரா. கார்த்திக், நாகார்ஜுனாவின் நூறாவது படத்தை இயக்க இருப்பதாக ஏற்கெனவே செய்திகள் வெளியாகி இருந்தன.

## ஸ்வேதா மேனன் மீதான வழக்கில் தடை நீடிப்பு!

மலையாள நடிகையும் அம்மாநில நடிகர் சங்கமான 'அம்மா'வின் தலைவருமான ஸ்வேதா மேனன், தமிழில், நான் அவனில்லை 2, துணை முதல்வர், சிநேகிதியே, அரவான் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

இவர், திரைப்படங்கள் மற்றும் விளம்பரங்களில் பணத்துக்காக ஆபாசமாக நடித்ததாகவும் அக்காட்சிகளை சமூக ஊடகங்கள், ஆபாச தளங்களில் வெளியிட்டு வருமானம் ஈட்டியதாகவும் சமூக ஆர்வலர் மார்ட்டின் மெனச்சேரி என்பவர், எர்ணாகுளம் நீதிமன்றத்தில் கடந்த மாதம் வழக்குத் தொடர்ந்தார்.


நீதிமன்ற உத்தரவுப்படி கொச்சி போலீஸார் ஸ்வேதா மீது வழக்குப் பதிவு செய்தனர். இதையடுத்து, தன் மீதான வழக்கை ரத்து செய்யக் கோரி கேரள உயர் நீதிமன்றத்தில் ஸ்வேதா மேனன் மனு தாக்கல் செய்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம், அவருக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டது.

இந்நிலையில் இந்த வழக்கு விசாரணை நேற்று மீண்டும் வந்தது. அப்போது இந்த தடை உத்தரவை அக்.28ம் தேதி வரை நீட்டித்து கேரள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

## டிச.25ல் வெளியாகிறது 'அனகோண்டா'!

ஜெனிபர் லோபஸ் நடித்து 1997ம் ஆண்டு வெளியான ஹாலிவுட் ஆக்‌ஷன் அட்வென்சர் படம், 'அனகோண்டா'. உலகம் முழுவதும் வரவேற்பைப் பெற்றது இந்த படம்.

'அனகோண்டா' படங்களின் வரிசையில் 6வது படம் இப்போது உருவாகியுள்ளது. 'அனகோண்டா' என்ற பெயரில் உருவாகி இருக்கும் இதை, டாம் கோர்மிகன் இயக்கியுள்ளார். ஜாக் பிளாக், பால் ரூட், ஸ்டீவ் ஜான், தாண்டிவே நியூட்டன், டேனிலா மெல்ச்சியர், செல்டன் மெல்லோ உள்பட பலர் நடித்துள்ளனர். ஆக்‌ஷன் அட்வென்சர் மற்றும் நகைச்சுவையுடனும் உருவாகியுள்ள இந்தப் படத்தின் டிரெய்லர் வரவேற்பைப் பெற்றுள்ளது.




டக் (ஜாக் பிளாக்), கிரிஃப் (பால் ரூட்) ஆகிய இருவரையும் மையமாகக் கொண்டு இதன் கதை நகர்கிறது. நீண்ட கால நண்பர்களான இருவரும் தங்களுக்குப் பிடித்த அட்வென்சர் திரைப்படத்தை உருவாக்கத் திட்டமிடுகிறார்கள். ஆனால் ராட்சத அனகோண்டா அவர்களின் ஆர்வத்தை முறியடிக்கிறது. ஒரு கட்டத்தில் படம் எடுப்பதை விட உயிர் பிழைக்கும் கட்டாயத்துக்குத் தள்ளப்படுகிறார்கள். பிறகு என்ன நடக்கிறது என்பது கதை. இந்தப் படம் டிச.25 அன்று தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு மொழிகளில் வெளியாகவுள்ளது.

## 'மெண்டல் மனதில்' பாடல்: ஜி.வி.பிரகாஷ் மகிழ்ச்சி

செல்வராகவன் இயக்கத்தில், ஜி.வி.பிரகாஷ் கதையின் நாயகனாக நடிக்கும் படம், 'மெண்டல் மனதில்'. இதில் நாயகியாக மாதுரி ஜெயின் நடிக்கிறார். அருண் ராமகிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்யும் இந்தப் படத்தை பேரலல் யுனிவர்ஸ் பிக்சர்ஸ் சார்பில் ஜி.வி.பிரகாஷ் தயாரிக்கிறார்.

ரொமான்ஸ் படமாக உருவாகி வரும் இதன் பாடல்கள் குறித்து, ஜி.வி.பிரகாஷ் கூறும்போது, "இந்தப் படம் என் மனதுக்கு நெருக்கமான படம். இதில் இடம்பெறும் பாடல்கள் எனக்கு ரொம்பவே ஸ்பெஷல். ரசிகர்களுக்கும் இது புதிய அனுபவமாக இருக்கும்" என்றார்.

இப்படத்தின் முதல் மூன்று கட்டப் படப்பிடிப்புகள் முடிவடைந்த நிலையில், தற்போது 4வது கட்டப் படப்பிடிப்பு நடந்து வருகிறது. விரைவில் முதல் சிங்கிள், டீஸர் பற்றிய அறிவிப்புகள் வெளியாகும் என்று படக்குழு தெரிவித்துள்ளது.

# நல்ல கதைக்கு பைனான்ஸ் கிடைப்பதில்லை

## எஸ்.ஏ.சந்திரசேகரன் வருத்தம்

பள்ளிப் பருவ மாணவர்களை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள படம், 'ராம் அப்துல்லா ஆண்டனி'. 'சூப்பர் சிங்கர்' மூலம் பிரபலமான பூவையார், ஆண்டனி கதாபாத்திரத்திலும் அப் துல்லா கதாபாத்திரத்தில் அர்ஜுன், ராம் கதாபாத் திரத்தில் அஜய் அர்னால்டு ஆகியோரும் நடித் துள்ளனர்.

த.ஜெயவேல் இயக்கியுள்ளார். எல்.கே.விஜய் ஒளிப்பதிவு செய்துள்ளார். டி.ஆர். கிருஷ்ண சேத் தன் இசை அமைத்துள்ளார். அன்னை வேளாங் கண்ணி ஸ்டுடியோஸ் சார்பில் கிளமண்ட் சுரேஷ் தயாரித்துள்ள இந்தப் படத்தின் இசை மற் றும் ட்ரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது.

இசைத்தட்டை வெளியிட்டு எஸ்.ஏ சந்திர சேகரன் பேசும்போது, "இப்போதைய ட்ரெண்ட் சூப்பர் ஸ்டாரை வைத்து படம் எடுத்தால் போட்ட பணத்தை எடுத்து விடலாம். தயாரிப்பாளர் தப்பித்து விடுவார். இல்லை என்றால் புதியவர் களை வைத்து படம் பண்ண வேண்டும். இதற் கு நடுவில் உள்ளவர்களை வைத்து படம் பண் ணினால் தயாரிப்பாளர்கள் காணாமல் போய்விடு வார்கள்.

சூப்பர் ஸ்டார்களை வைத்து படம் எடுத்தால் அதற்கு பைனான்ஸ் கொடுப்பதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். நல்ல கதையை வைத்து படம் எடுப்பதற்கு பைனான்ஸ் பண்ண ஆட் கள் தயாராக இல்லை.

ஒரு காரியத்தை ஆரம்பிக்கும்போது நாம் ஜெயிப்போம் என நினைத்து ஆரம்பித்தால், கண்டிப்பாக ஜெயிப்போம். இப்போது வரை, நான் ஜெயிப்பேன் என்று தான் படம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். இந்தப் படம் வெற்றி அடையும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. இன்றைய தலை முறை, வன்முறையை தான் ரசிக்கிறார்கள் என்று சொல்லும் இயக்குநர்கள், கத்தி, ரத்தம், சத்தம் என இந்த மூன்றையும் நம்பித்தான் படம் எடுக்க வருகிறார்களே தவிர, கதை எதுவும் கிடையாது" என்றார்.



தினசரி நாளிதழின் இன்றைய இணைப்பு
cinethuli.com
சினித்துளி.com

# ஆன்லைன் கேமர்கள் குறித்த படம்




ஆன்லைன் விளையாட்டுகளைச் சட்டம் போட்டுத் தடுத்தாலும் வெவ்வேறு வடிவங்களில் அது வந்துகொண்டேதான் இருக்கிறது. ஒரு காலத்தில் லாட்டரி சீட்டும், அதிக வட்டி தருவ தாகக் கூறி ஆசை காட்டி பணம் திரட்டியநிதிநிறுவனங்கள் மக்களை அடிமையாக்கி வைத்திருந்தன. அவற்றில் ஏராளமாக பணத்தை இழந்தார்கள்.

இன்றைக்கும் 'இரிடியம்', ஈமு கோழி, மாங்கோ ஃபார்ம், லில்லிபுட் என்று மோசடிக் கூட்டத்திடம் பணத்தை இழப்பதுபோலவே ஆன்லைன் சூதாட்டங்களில் ஈடுபட கடன் கொடுக்கும் ஃபைனான்ஸ் மாபியாவிடம் சிக்கி, பல லட்சம் கடன் வாங்கி அதைக் கட்ட முடியாமல் அவர்களிடம் சிக்கி அல்லல்படுபவர்களின் கதை, இன்னும் வெளிவராத உண்மைக் கதையாகவே இருக்கிறது.

அப்படியொரு உண்மையான கதைக் களத்தை எடுத்துக்கொண்டு, அறிமுக இயக்குநர் அபிஷேக் லெஸ்லி இயக்கியிருக்கும் படம் 'கேம் ஆஃப் லோன்ஸ்'. இவர், எடுத்த 'கூவம்' என்கிற ஆவணப்படம், 'சிறந்த நீர்நிலை ஆவணப்பட'த்துக்கான புதிய தலைமுறைத் தொலைக்காட்சியின் விருதை 2012இல் பெற்றதுள்ளது. விருதை கே.பாலசந்தரிடமிருந்து பெற்றதைப் பெருமையாகக் கூறும் இவர், கே.பாலசந்தரின் மகன் மறைந்த பால கைலாசம் உள்படப் பலரிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய பின் மென்பொருள் துறையில் பணியாற்றி வந்துள்ளார்.

'கேம் ஆஃப் லோன்ஸ்' படத்தை, ஜே.ஆர்.ஜி. புரொடெக்ஷன் சார்பில், ஜீவானந்தம் தயாரிக்க, சபரி ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் மூலம் ஜோ கோஸ்டா இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். வரும் அக்டோபர் 17 ஆம் தேதி தீபாவளி வெளியீடாக படம் திரையரங்குகளில் வெளியாகிறது.

படம் குறித்து இயக்குநரிடம் கேட்டபோது: "கரோனா ஊரடங்கு காலத்தில் தான் இப்படத்தின் கரு எனக்குத் தோன்றியது. நான் ஐடியில் வேலை பார்ப்பவன், ஏஜ யிடம் ஒருவன் மாட்டிக்கொண்டால் என்னாகும் எனக் குறும்படம்



எடுத்தேன், அது கான்ஸ் திரை விழாவில் கலந்துகொண்டு விருது வென்றது. லாக்டவுன் காலத்தில் ஆன்லைன் கேமிங் ஆன்லைன் லோன் என பலர் சிக்கிக்கொள்வதைத் தினமும் கேள்விப்பட்டேன்.

என் நண்பர்கள் பலரே இதில் மாட்டியிருக் கின்றனர். அவர்களையெல்லாம், நண்பர்களின் உதவியுடன் மீட்டெடுத்தோம். அதற்காகக் கடன் கொடுத்தவர்களிடம் நெகோசியேட் செய்த போதுதான் அந்த உலகம் எவ்வளவு பயங்கரமானது என்பதைத் தெரிந்துகொண்டேன்.

இதைப்பற்றிய விழிப்புணர்வு தரும் வகையில் ஏன் ஒரு படம் செய்யக் கூடாது என்ற எண்ணத்தில் உருவானது தான் இப்படம்.

\ ஆன்லைன் லோன் வாங்குவது இன்றைய காலகட்டத்தில் மிக மிக எளிதானது ஆனால் அதைத் திருப்பிக்கட்டுவது என்பது மிகப்பெரிய சிக்கலாக மாறியிருக்கிறது.

அப்படி ஆன்லைன் கேமுக்கு அடிமையாகி, லோன் வாங்கி சிக்கலில் மாட்டிக்கொள்ளும் ஒருவன், காலை முதல் மாலை வரை ஒரு நாளில் சந்திக்கும் பிரச்சினைகள் தான் படம். ஒரு கதைக்குப் பாடல்களோ காமெடியோ முக்கியமில்லை. ரசிகர்களைக் கதைக்குள் இழுக்கும் அவர்கள் வாழ்க்கையுடன் தொடர்பு படுத்திக்கொள்ளும் அம்சம் இருந்தாலே போதும். அதை இந்தக் கதைக்களம் அழுத்தமாக எப்போதும் சுவாரஸ்யமான திரைக்கதை தான் முக்கியம். குறைந்த கதாபாத்திரங்கள் என்றாலும் கதைக்கு என்ன தேவையோ அதைச் சரியாகச் செய்திருக்கிறோம். எல்லோரும் தங்கள் வாழ்க்கையில் ஒருமுறையேனும் கடன் வாங்கியிருப்பார்கள் இந்தப்படம் பார்க்கும் போது இதை தங்கள் கதையாக உணர்வார்கள். கண்டிப்பாக மக்கள் ரசித்துப்பார்க்கும் ஒரு படமாக இப்படம் இருக்கும்.

வழக்கமான பாடல், ஃபைட், காமெடி என எந்த அம்சங்களும் இல்லாமல் முழுக்க வித்தியாசமான திரைக்கதையில், சுவாரஸ்யமான வகையில் 90 நிமிட கமர்ஷியல் படமாக இப்படமாக இதை உருவாகியுள்ளோம். படப்பிடிப்பு முழுக்க முழுக்க பெங்களூரில் நடத்தினோம். தனிக்கைக் குழு யு/ஏ சான்றிதழ் அளித்துள்ளது. ” என்றார்.

மேலும் படத்தில் நடித்திருப்பவர்கள் பற்றிக் கூறும்போது “கதையின் நாயகன் ஒரு புரட்ட கானிஸ்டா அல்லது ஆண்டகானிஸ்டா என்று பகுத்தறிய முடியாத ஒரு லீட் ரோலில் நடித்திருக்கிறார் நிவாஸ் ஆதித்தன்.

இவர் 'காக்க முட்டை', ‘சித்திரம் பேசுதடி 2’ படங்களில் கவனம் பெற்றவர். இவருக்கு இணையான ஒரு கதாபாத்திரத்தில் அபிநய் வில்லனாகக் கலக்கியுள்ளார். நாயகியாக எஸ்தர் நடித்திருக்கிறார். சிறார் நடிகராக, ஆத்விக் அறி முகமாகிறார்.

‘கேம் ஆஃப் லோன்ஸ்’ ஆன்லைன் கேமிங்கில் பணம் கட்டும் ஆசாமிகளுக்கு மட்டுமல்ல; அவர்களுக்கு அதிக வட்டிக்குக் கடன் கொடுக்கும் கும்பலுக்கும் ஆப்படிக்கும் படம்” என்றார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

வழங்கும் சிறப்பு போட்டி

# உங்கள் ஊரின் சிறப்பை சொல்லுங்கள்

# சூப்பர் பரிசை வெல்லுங்கள்...

உங்கள் ஊரின் சிறப்பை கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு அனுப்பி வைக்கவும் தேர்ந்தெடுக்கும் நபருக்கு சிறப்பு பரிசு உண்டு.

**Whatsup no.8122664699**




அன்றாடச் செய்திகளை துல்லியமாக தரும்

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

இந்தியா எனது மூன்றாவது ஆட்சிக்காலத்தில்

டாப்-3 பொருளாதாரங்களில் ஒன்றாக இருக்கும்

7789941009

8122664699


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

7789941009

8122664699




தமிழ்நாடு இ பேப்பர்.காம்

8122664699

எந்தவித மறை முக கட்டணமும் இல்லை **சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை,** உங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எங்களுக்கு தெரியபடுத்துங்கள், நமது இ–பேப்பரை படித்து பயன்பெறுங்கள்,

**Whatsup no.8122664699**

TamilnaduEpaper.com